பக்கங்கள்: 21

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 பங்குனி 23 ஞாயிற்றுக்கிழமை 05.04.2020 கதிர் 151

இனி இது ரகசியம் அல்ல!

கொரோனாத் தொற்று சந்தேக நபரின் இரத்த மாதிரியை எடுத்து ஆய்வுகூடத்தில் சோதனை செய்து, தொற்று இல்லை என்று 'கிளியர்' பண்ணினாலும் நம்ப முடியாது போல. மீண்டும், மீண்டும் அவ்வப்போது செய்து பாருங்கள் என்று பக்கம் 02

# தாவடியில் மூவருக்கு தொற்று!

## உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்று

யாழ்ப்பாணம், ஏப்ரல்.05

யாழ்ப்பாணம், தாவடியில் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசத்தில் வாழும் குடும்பங்களில் பதினெட்டுப் பேரின் இரத்த மாதிரிகள் நேற்று முன்தினம் பரிசோதனைக்காக அநுராதபுரத்துக்கு அனுப்பப்பட்டன. அவற்றில் மூவருக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக நேற்றிரவு நம்பகரமாக அறியவந்தது.

இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்று காலை வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 2

## கொரோனா எண்ணிக்கை 166 ஆகியது!

கொழும்பு, ஏப். 05

கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் நான்கு பேர் நேற்று சனிக்கிழமை இரவு அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இலங்கையில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோரின் 2

## அறிவில்லாத விமல்!

### சாடுகின்றார் சித்தார்த்தன்

எஸ்.நிதர்ஷன்

யாழ்ப்பாணம், ஏப். 05

யுத்தத்தைக் கட்டுப்படுத்தியது போன்று கொரோனாவையும் கட்டுப்படுத்துவோம் என விமல் வீரவன்ஸ போன்றோர் கூறுவது அவர்களது அறிவீனத்தைக் காட்டுவதாகத் தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன். 2

## தனிமைப்படுத்தல் மையத்திலிருந்து வீடு திரும்பியவருக்கும் கொரோனா!

கொழும்பு, ஏப். 05

வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பி 14 நாள்கள் தனிமைப்படுத்தல் நிலையத்தில் கண்காணிக்கப்பட்டு வீடு திரும்பியவருக்கு 10 நாள்களின் பின் கொரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் 10ஆம் திகதி தென் கொரியாவிலிருந்து நாடு திரும்பிய அவர், 2

## வதந்தி பரப்புவோர் விசாரணைக்குள்!


கொழும்பு, ஏப். 05

நாடு முற்றாக முடக்கப்படவுள்ளதாக பரவியுள்ள வதந்தி முற்றிலும் ஆதாரமற்றது எனப் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

வதந்தியைப் பரப்புவோர் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். 2

## மனக் கட்டுப்பாட்டுடன் இருக்கவேண்டும் மக்கள்

### சித்தார்த்தன் கோரிக்கை



எஸ்.நிதர்ஷன்

யாழ்ப்பாணம், ஏப். 05

பொது மக்கள் ஒவ்வொருவரும் மனக்கட்டுப்பாட்டுடன் மருத்துவத் துறையினரின் ஆலோசனைகளைப் பின்பற்றி அவதானமாகச் செயற்படவேண்டுமெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற 2

## மஹிந்த தம்பதியர் வீட்டுத் தோட்டம்




கொழும்பு, ஏப். 05

வீட்டுத்தோட்டச் சவாலில் பங்கெடுக்கத் தனக்கும், தனது மனைவி ஷிரந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தமை குறித்து மிகவும் மகிழ்ச்சியடைவதாகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 2

## அரசு அறிவித்த உதவி மக்களை எட்டவில்லை

### சிறிகாந்தா குற்றச்சாட்டு



எஸ்.நிதர்ஷன்

யாழ்ப்பாணம், ஏப்.05

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அரசு அறிவித்த உதவித்திட்டங்கள் உரிய முறையில் சென்றடையவில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ள தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி என்.சிறிகாந்தா, இந்தத் 4

## யாழில் பரிசோதிக்கப்பட்ட 17 பேருக்கும் தொற்றில்லை

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப். 05

யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்றுத் தொடர்பில் 17 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்குட் படுத்தப்பட்ட நிலையில் எவருக்கும் பாதிப்பு இல்லை என்று அறிக்கை கிடைத்துள்ளது என்று யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் உள்ள பி.சி.ஆர். இயந்திரத்தின் ஊடாக 17 பேரின் மாதிரிகள் நேற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. கொரோனா வைரஸ் தொடர்பில் 2

## மக்களுக்கான உதவிகளை தேர்தல் இலஞ்சமாக்காதீர்!

### வேட்பாளர்களிடம் சிறிகாந்தா கோரிக்கை

எஸ்.நிதர்ஷன்

யாழ்ப்பாணம், ஏப். 05

நாடாளுமன்றத் தேர்தலில் களமிறங்கியிருக்கும் வேட்பாளர்கள் மக்களின் உணர்வுகளை மலினமாக எடை போட்டு நிவாரப் பணிகளில் ஈடுபடுவது வெறுக்கத்தக்க செயல் எனச் சுட்டிக்காட்டியுள்ள தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான என். சிறிகாந்தா, பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை தேர்தலுக்கான சில்லறை இலஞ்சமாக இனிமேலும் எவரும் பயன்படுத்தக்கூடாது என்றும் கேட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் - 2

## மக்களுக்கான ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பாதிக்கப்பட்டுள்ள எமது மக்களுக்கு இன்று பலரும் கைகொடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை பல்வேறு சமூகநலன் விரும்பிகள், தொண்டர் நிறுவனங்கள், மக்கள் அமைப்புக்கள், இளைஞர் அமைப்புக்கள் என எல்லோரும் களத்தில் இறங்கித் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். அது மிகவும் பாராட்டப்படவேண்டிய விடயம்.

ஆனால் அதே நேரத்தில் தேர்தலுக்காக நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற நிலையில் இன்னுமொரு விடயத்தைக் குறிப்பிட்டாக வேண்டும். ஆனாலும் அவ்வாறு தேர்தல் குறித்து பேசுவதற்கான நேரம் இதுவல்ல. அவ்வாறு இல்லாவிட்டாலும் கூடப் பேச வேண்டியிருக்கிறது.

அதாவது தேர்தலில் களமிறங்கியிருக்கும் சில வேட்பாளர்கள் மிகமலினமாக மக்களின் உணர்வுகளை எடைபோட்டு நிவாரணப் பணிகளில் ஈடுபடுவதென்பது வெறுக்கத்தக்க செயல் என்பதை ஆகக் கூடிய பொறுப்புணர்வோடு நாங்கள் சொல்லிக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறோம்.

அதற்கான ஆதாரங்கள் எங்களிடம் இருக்கின்றன. குறிப்பாக வடக்கைப் பொறுத்தமட்டிலே, அதுவும் யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை, நேரடியான ஆதாரங்கள் எங்களிடம் இருக்கின்றன. அவற்றை எல்லாம் நாங்கள் தேர்தல் ஆணையகத்துக்கு அனுப்ப முடியும். முறையீடு செய்ய முடியும். ஆனால் அவ்விதம் முறையீடு செய்வது ஒட்டுமொத்த சமூகத்தையும் நாங்கள் அவமானப்படுத்துகின்ற ஒரு விடயமாகத்தான் இருக்கும்.

ஆக உதவிகள் வரவேற்கப் படவேண்டியவைதான். உதவிகள் செய்வதற்கு எல்லோருக்கும் உரிமை உண்டு. அதை நாங்கள் பாராட்டுகிறோம். ஆனால் தயவு செய்து அந்த உதவிகளைத் தேர்தலுக்கான சில்லறை இலஞ்சமாகப் பயன்படுத்துவதை இனிமேலாவது எவரும் தொடரக் கூடாது. அவ்விதம் செய்தல் கூடாது என்று நாங்கள் உரிமையோடு கேட்டுக் கொள்ள விரும்புகின்றோம் - என்றார்.

## கொரோனா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எண்ணிக்கை 166 ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உள் பட) அதிகரித்துள்ளது.

அவர்களில் 25 பேர் முழுமையாகச் சுகமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

136 பேர் வைத்தியசாலைகளில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதுடன் அவர்களில் ஒருவர் கவலைக்கிடமான நிலையில் அதிதீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

நாடு முழுவதுமுள்ள 22 வைத்தியசாலைகளில் 273 பேர் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

## தாவடியில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்த மூவரோடு யாழ்ப்பாணத்தில் கொரோனா வைரஸ் தொற்றியோர் எண்ணிக்கை 10ஆக உயர்ந்தது.

யாழ்ப்பாணத்தில் முதல் கொரோனாத் தொற்றாளி தாவடியில் கண்டு பிடிக்கப்பட்டார். அதனையடுத்து அவர் வாழ்ந்த பிரதேசம் தனிமைப்படுத்தப்பட்டது. நூற்றுக்கும் அதிகமான குடும்பங்கள் சமூகத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் மத்தியிலேயே தெரிவு செய்யப்பட்ட 18 பேரின் இரத்த மாதிரிகள் நேற்று முன்தினம் அநுராதபுரத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அதில் மூவருக்கே தொற்று இருப்பதாக நேற்று மாலை அதிகாரிகளுக்குத் தகவல் கிடைத்ததாக அறியவந்தது.

இது பற்றிய உத்தியோகபூர்வ அறிக்கையை மருத்துவர்கள் இன்று காலை வெளியிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தாவடியில் இரத்த மாதிரி எடுக்கப்பட்ட மற்றைய 15 பேருக்கும் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது. தொற்று இருப்பதாகக் காணப்பட்ட மூவரும் இதற்கான சிகிச்சைப் பிரிவுக்கு அனுப்பப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

## அறிவில்லாத ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விரவன்ஸ போன்றோர் விதண்டாவாதம் கதைப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் கேட்டுள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டுமென்ற கோரிக்கை பரவலாக வைக்கப்பட்டு வருகின்றது. அதிலும் எதிர்க்கட்சிகளால் இந்தக் கோரிக்கை தொடர்ந்தும் வலியுறுத்தப்பட்டுக்கொண்டுதான் வருகின்றது. அதேபோல அரசிலுள்ள ஒரு சிலரும் நாடாளுமன்றம் கூட்டப்படவேண்டுமென பதில் விருப்பம் காட்டுகின்றனர்.

ஆனால் விமல் வீரவன்ஸ போன்றவர்கள், நாங்கள் யுத்தத்தையே கட்டுப்படுத்தியவர்கள். ஆகவே இந்த வைரஸ் தாக்கத்தையும் தனிய அரசாகவே கட்டுப்படுத்துவோம் என்று தமது கருத்துக்களைக் கூறி வருகின்றனர்.

ஊண்மையில் அவ்வாறு கூறுவதென்பது அவர்களுடைய அறிவீனத்தை மிகத் தெளிவாக காட்டுகின்றது. ஏனென்றால் கொரோனா வைரஸ் தாக்கத்திற்கும் யுத்தத்திற்கும் இடையிலான பாரிய வித்தியாசத்தை தெரியாமலே அவர்கள் கதைத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்று தான் நான் கருதுகின்றேன்.

இந்த வைரஸ் என்பது யாருக்கும் வரலாம். உலக நாடுகளின் பல தலைவர்களுக்கு கூட இந்த நோய்த் தாக்கம் வந்திருக்கிறது. குறிப்பாக யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது உங்களை நீங்கள் பாதுகாத்துக் கொண்டிருப்பீர்கள். சாதாரண பொது மக்கள்தான் பாதிக்கப்பட்டிருப்பார்கள். ஆனால் இந்த நோய் என்பது அப்படியல்லை யாரையும் பாதிக்கும்.

ஆகவே விதண்டாவாதங்களை - ஏட்டிக்குப் போட்டி கதைகளை - எல்லாம் விட்டு விட்டு ஒட்டுமொத்தமாகச் சேர்ந்து இந்த கொரோனா வைரஸ் நோயை எதிர்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் இது நாட்டுக்கு மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் - என்றார்.

## மஹிந்த தம்பதியர் .......



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தனது டுவிட்டர் பக்கத்தில் இட்டுள்ள பதிவில் அவர், கொரோனா வைரஸ் தொற்று உலகத்தை அழித்துள்ளது. அத்துடன் அது எமது எதிர்கால சந்ததியினர் மிகவும் நிலையான வாழ்க்கை முறைகளைப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை கற்பித்துள்ளது. அனைவரும் தங்களது பங்கை செய்ய வேண்டும் என நான் ஊக்குவிக்கின்றேன் எனக் கூறியுள்ளார்.

அத்துடன் தங்காலை கால்டன் இல்லத்தில் பிரதமரும், அவரது பாரியாரும் செடி ஒன்றை நாட்டி அதற்கு தண்ணீர் பாய்ச்சும் படங்களும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

## வதந்தி பரப்புவோர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எதிர்வரும் 10 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை நாடு முற்றிலுமாக முடக்கப் படவுள்ளது என்றும், இந்தக் காலத்தில் அனைத்து அத்தியாவசிய சேவைகளும் தடைப்படும் என்றும், அத்தியாவசிய பொருட்களின் விநியோகங்களும் முடக்கப்படும் என்றும் வீடியோ மற்றும் பதிவுகள் சமூக ஊடகங்களில் பரவி வருகின்றன.

இந்த நிலையிலேயே இந்தச் செய்தி பொய்யானது என்று பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

## மனக் கட்டுப்பாட்டுடன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

சுன்னாகம் கந்தரோடையிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

உலக நாடுகள் பலவற்றிலும் கொரோனா தாக்கத்தை ஏற்படுத்தி வரும் நிலையில் அதன் தாக்கம் இலங்கையிலும் ஏற்பட்டிருக்கின்றது. அதே நேரத்தில் இலங்கை அரசு எடுக்கின்ற நடவடிக்கைகள் ஓரளவுக்கு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தாலும் இந்த வைரஸ் தொற்று சில வேளைகளில் பெரியளவில் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்று மருத்துவத் துறையினர் எச்சரித்துக் கொண்டு இருக்கின்றனர்.

ஆகையினால் மக்கள் மிக அவதானமாக இருக்க வேண்டுமென்றும் மருத்துவத் துறையினரால் அறிவுறுத்தப்பட்டு இருக்கின்றனர். எனவே இன்றைக்கிருக்கும் நிலைமையில் மக்கள் ஒவ்வொருவரும் உண்மையில் மருத்துவத் துறையினரின் ஆலோசனைகளைப் பின்பற்றி மிகவும் கவனமாக இருக்கவேண்டியது அவசியமானது.

அதற்கமைய தம்மைத் தாமே தனிமைப்படுத்தி கூடியளவில் கூட்டமாகச் சேரமலும் வெளியே செல்லாமலும் தவிர்த்துக் கொள்ளவேண்டும். அவ்வாறு செயற்படுவதனூடாக இந்த நோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும். ஆகவே மக்கள் கொஞ்சநாள் மனதைக் கட்டுப்படுத்தி தனிமைப்படுத்தி இருக்கும்படி தாழ்மையாக கேட்டுக்கொள்கிறேன் - என்றார்.

## யாழில் பரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ்ப்பாணத்தில் பரிசோதனை செய்யப்பட்டது இதுவே முதன் முறையாகும்.

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டு தங்கி இருந்தவர்கள் மூவருக்கும் வைத்தியசாலைக்கு வெளியே தொற்றுக்கு உள்ளானவர்களுடன் தொடர்புடையவர்கள் என இனங்காணப்பட்ட 14 பேருக்கும் என 17 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது.

தொற்றுக்கு உள்ளானவர்களுடன் தொடர்புடையவர்கள் என இனங்காணப்பட்ட 14 பேரில் மானிப்பாய் பகுதியில் எட்டு (8) பேருக்கும் அரியாலைப் பகுதியில் ஆறு (6) பேருக்கும் பரிசோதனை செய்யப்பட்டது.

அந்தப் பரிசோதனையில் 17 பேருக்கும் கொரோனா தொற்று இல்லை என உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் தாவடிப் பகுதியில் 18 பேருக்குச் சந்தேகத்தின் பேரில் எடுக்கப்பட்ட பரிசோதனைகளின் முடிவுகள் நேற்று பின்னிரவு வெளியிடப்படும் என்றும் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி கூறினார்.

## தனிமைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கந்தக்காடு தனிமைப்படுத்தல் நிலையத்தில் 14 நாள்கள் தங்கவைக்கப்பட்டு கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து கடந்த 24ஆம் திகதி அவர், மத்துகமவிலுள்ள தனது வீட்டுக்குத் திரும்பியுள்ளார்.

இந்த நிலையில் 10 நாள்களின் பின்னர் அவருக்கு ஏற்பட்ட உடல்நிலை மாற்றத்தால் களுத்துறை நாகொடை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்ந்துள்ளார்.

அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் அந்த நபர் தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலைக்கு (ஐ.டி.எச்.) சிகிச்சைக்காக மாற்றப்பட்டுள்ளார்.

## இனி இது ....

(முதலாம் பக்கத் தொடரச்சி)
நாட்டின் தலைவரே ஆலோசனை கூறுமளவுக்கு ஒளித்துப் பிடித்து விளையாடுகின்றதாம் கொரோனா வைரஸ்.

தென்கொரியாவிலிருந்து நாடு திரும்பி, 14 நாள்கள் தனிமைப்படுத்தல் மையத்தில் தவம் கிடந்து, பின்னர் இரத்தப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, 'தொற்று இல்லை' என்ற சான்றிதழுடன் மத்துகமவில் தன் வீட்டுக்குச் சென்றவர் பத்து நாள்களில் கொரோனாத் தொற்றுடன் மீண்டும் ஆஸ்பத்திரியில்.

பதுங்கியிருந்து பாயும் ஆட்டத்தைக் காட்டும் கொரோனாவை நாடு எப்படிச் சமாளிக்கப்போகின்றதோ தெரியவில்லை. ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்.

* * *

வேறு வேலையின்றி தொலைக்காட்சி விவாதங்கள் மூலம் தங்கள் அளப்புகளைக் காட்டிக் கொண்டிருக்கின்றார்கள் தென்பகுதி அரசியல்வாதிகள்.

வீடுகளில் 'சிவனே' என்று (மன்னிக்கவும் 'புத்தரே' என்று) அடைந்து கிடக்கும் தென்னிலங்கை ஸ்ரீமான் பொதுஜனமும் வேறு வழியின்றி அந்த விவாதங்களைக் கேட்டுத் தொலைப்பதுதான் தமக்கு ஒரே மார்க்கம் என்று கருதி அதில் தொங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்தத் தொலைக்காட்சி விவாதங்களில் பேரினவாதம் கரைபுரண்டு ஓடுகின்றது.

பெரும்பாலும் தாக்குதலுக்கு இலக்காகின்றவர்கள் இரண்டு பேர்.

முஸ்லிம்கள் தரப்பில் - ரிஷாத் பதியுதீன்; தமிழர்கள் தரப்பில் - சுமந்திரன்.

இப்போது நாடாளுமன்றத்தை மீளக்கூட்டுங்கள் என்ற கருத்தை எதிரணி தரப்பில் வலிமையான சட்ட ஆதாரங்களோடு முன் வைத்தவர் சுமந்திரன்தான்.

அதனால் இப்போது நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுங்கள் என்ற கோரிக்கை - சுமந்திரன் வெளிப்படுத்தியமையால் - தமிழர்களின் வேண்டுகோளாக தெற்கு சிங்களவர்கள் முன் படம் காட்டப்படுகின்றது.

அதனால் அந்தக் கருத்துக்கு பதிலடி கொடுக்கும் அர்ச்சனைகள் தாம் தெற்கு ஊடகங்களில் இப்போது அதிகம் கட்ட விழ்கின்றன.

பௌத்த மத பீடங்களின் மகாநாயக்கர்களே நாடாளுமன்றத்தை மீளக் கூட்டும் கருத்தை - ஏதோ தீண்டத்தகாத பொருளை தீண்டிய மாதிரி - மோசமாக விமர்சிக்கின்றனர்.

நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுங்கள் என்ற கோரிக்கை ஜனநாயக ரீதியில் நியாயமானது என்றாலும் -

அதனைத் தமிழரின் கோரிக்கையாகக் காட்டி, இனவாதம் கிளப்பி, அதனால் அதை சிங்கள மக்கள் ஏற்கக் கூடாது என்று மனநிலைப்பாட்டை உருவாக்கும் பேரினவாதப் பெரும் திட்டம் கனகச்சிதமாக முன்னெடுக்கப்படுகின்றது.

பாவம், சுமந்திரன்.

இங்கு வடக்கிலும் விமர்சன அம்புகள் அவருக்கு எதிராகத்தான். தெற்கிலும் கண்டனப் பீரங்கிகள் அவரை நோக்கித்தான்.

இரண்டு பக்கத்திலும் அவர் வாங்கிக் கட்டுவதைப் பார்க்கும்போது 'கிரி' படத்தில் வடிவேலுவின் நகைச்சுவை வசனம்தான் எனக்கு நினைவுக்கு வந்தது.

".. டேய், இவன் எவ்வளவு அடிச்சாலும் தாங்குறான்டா, இவன் ரொம்ப நல்லவன்டா!" - இதுதான் அந்த நகைச்சுவை வசனம்.

இது சுமந்திரனுக்குப் பொருந்துமா, இல்லையா? வாசகர்களே முடிவு செய்து கொள்ளட்டும்.

- மின்னல் -

# மொத்தம் 2,691 கைதிகளுக்குப் பிணை!

கொழும்பு,ஏப்.05

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பணிப்புரையின் பேரில் நியமிக்கப்பட்ட விசேட குழுவின் பரிந்துரையின்படி, நீதிமன்ற உத்தரவில் 2,691 கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். மார்ச் மாதம் 17ஆம் திகதி முதல் நேற்று வரையான காலப்பகுதியில் இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.



சிறைச்சாலை வளாகத்துக்கு ஜனாதிபதி மேற்கொண்ட கண்காணிப்பு விஜயத்தின் போது கைதிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் பேரில் நிவாரணம் வழங்குவதற்காகக் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

ஜனாதிபதியின்பணிப்புரையின்பேரில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், நீதி அமைச்சு, சிறைச்சாலைகள் திணைக்களம் ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகளை கொண்ட குழு, கைதிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கான பரிந்துரையை ஜனாதிபதியின் செயலாளரிடம் முன்வைத் திருந்தது.

தண்டப் பணம் செலுத்த முடியாமை, பிணை வழங்கப்பட்டிருந்த போதும் பிணை நிபந்தனைகளை முழுமைப்படுத்த முடியாமை, மிகவும் சிறிய குற்றங்களுக்காக சிறையிலடைக்கப்பட்டவர்கள், தண்டனைக் காலத்தில் பெரும் பகுதியை நிறைவுசெய்துள்ள, மிகவும் பாரதூரமான சுகாதார காரணங்களினால் பாதிக்கப்பட்டு நீண்ட காலமாக சிறையிலிருப் பவர்கள் மற்றும் பிணை வழங்கு தல் அல்லது குற்றப்பத்திரிகை தாக்கல்செய்யப்பட்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்படாத சிறைக் கைதிகள் தொடர்பில் இதன் போது கருத்திற்கொள்ளப்பட்டதாக ஜனாதிபதியின் சட்ட விவகாரங்களுக்கு பொறுப்பான பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி ஹரிகுப்த ரோஹணதீர தெரிவித்தார்.

சிறைச்சாலைகளில் உள்ள சிறைக் கைதிகளுக்கான இட வசதி பத்தாயிரம் பேருக்கானதாகும். எனினும் இருபதாயிரத்துக்கும் அதிகமானவர்கள் சிறைக் கைதிகளாக உள்ளனர். நாட்டில் தற்போது நிலவும் சுகாதார நிலைமைகளும் இதன் போது கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது. விடுவிக்கப்பட்டுள்ளவர்கள் நீதிமன்றம் வழங்கியுள்ள நிவாரணத்தை மீறாது, விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றி சிறந்த முறையில் சமூகத்தில் வாழவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# மக்களுக்கு உதவி செய்வதைப் படம் எடுத்து வெளியிட்டு அரசியல் இலாபம் தேடாதீர்கள்!

## தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் எச்சரிக்கை



கொழும்பு,ஏப்.05

கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்வதைப் புகைப்படம் எடுத்து அதை சமூவலைத்தளங்களில் வெளியிட்டு அரசியல் இலாபம் தேட வேண்டாம் என தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில்அவர்இன்றுஅறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–


எமது நாடு என்றுமே முகங்கொடுக்காத கொவிட்19 தொற்றுக்கு உள்ளாகியுள்ள நிலையில், மக்களுக்கு அரசியல்வாதிகள், மதத் தலைவர்கள், வியாபாரிகள், தனவந்தர்கள், சமூக சேவகர்கள் பல உதவிகளை செய்து வருகின்றனர்.

எனினும், சில அரசியல்வாதிகள் தாம் செய்யும் உதவிகளை படம் பிடித்து வெகுஜன மற்றும் சமூக ஊடகங்களில் பதிவிட்டு அரசியல் இலாபத்தை தேட முயற்சிக்கின்றனர்.

முழு சமுதாயமும் கொவிட்19 தொற்றுக்கு எதிராக அர்ப்பணிப்புடன் செயற்படும் இந்த சந்தர்ப்பத்தில் இவ்வாறான பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டாம். – என தெரிவித்துள்ளார்.




# இன்று முதல் சூரியன் உச்சத்தில்



இலங்கையில் இன்று முதல் எதிர்வரும் 14ஆம் திகதி வரை சூரியன் அகலாங்குகளுக்கு மேலாக உச்சம் கொடுக்கவுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, இன்று மதியம் 12.13 மணிக்கு அம்பலங்கொடை, தல்கஸ்வல, பஸ்கொட, மித்தெனிய, உஸ்வெவ மற்றும் வீரவில ஆகிய இடங்களில் சூரியன் உச்சம் பெற்று காணப்படும்.

இதேவேளை, சபராகமுவ, மேல், வடமேல், மத்திய, தென் மற்றும் வடமத்திய மாகாணங்களிலும், மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களிலும் பிற்பகல் 2 மணிக்குப் பிறகு மழை பெய்யும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# புத்தாண்டு காலம் முடியும் வரையிலும் தற்போதைய கட்டுப்பாடுகள் தொடரும்

## ஜனாதிபதி தலைமையில் நேற்று நடந்த கூட்டத்தில் முடிவு

கொழும்பு,ஏப்.05

கொவிட் – 19 என்னும் கொரோனா வைரஸ் நாட்டினுள் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ள நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்து அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்துத் தீர்மானிப்பதற்கான கலந்துரையாடல் ஒன்று, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் அநுருத்த பாதெனிய, வைரஸின் உலகளாவிய பரவல் மற்றும் அதனைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் மேற்கொண்ட செயற்பாடுகளின் முன்னேற்றம் குறித்து விளக்கினார். நாட்டினுள் வைரஸ் தொற்றுக் கண்டறியப்பட்ட முதல் சந்தர்ப்பத்திலேயே ஜனாதிபதி தலைமையில் அரசாங்கம் மேற்கொண்ட உடனடி நடவடிக்கைகளின் காரணமாக இந்த சுகாதார பிரச்சினை கட்டுப்பாட்டை மீறிச் செல்ல இடமளிக்காது முகாமை த்துவம் செய்ய முடியுமாக இருந்ததாக இங்கு கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

கொரோனா நோயாளிகள் அதிகம் கண்டறியப்பட்டுள்ள சில மாவட்டங்கள் தவிர பெரும்பாலான மாவட்டங்களில் நோய் பரவும் அச்சுறுத்தல் தற்போது இல்லை. எதிர்வரும் புத்தாண்டு காலம் நிறைவுறுவதுடன் இடர் நிலைமை இல்லாத மாவட்டங்களில் தற்போது நடைமுறையிலுள்ள கட்டுப்பாடுகளை நீக்கக் கூடிய வாய்ப்பு உள்ளது.

எனவே புத்தாண்டு நிறைவுறும் வரை கொரோனா ஒழிப்பு தற்போதைய நிகழ்ச்சித்திட்டத்தை முன்னெடுத்துச் சென்று பின்னர் நிலைமையை ஆராய்ந்து அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிக்க கலந்துரையாட இணக்கம் காணப்பட்டது.

ஜனாதிபதியின் தலைமையில் அரசாங்கம் இதுவரையில் செயற்பட்டதைப் போன்று வைரஸை ஒழிக்க தொடர்ந்தும் சுகாதார, மருத்துவ, பாதுகாப்பு மற்றும் சட்டம் உள்ளிட்ட குறித்த துறைகளின் நிபுணர்களின் ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும். நோயின் உலகளாவிய பரவலை கண்காணித்து உலக சுகாதார தாபனம் அவ்வப்போது செய்யும் பரிந்துரைகளை ஆராய்ந்து பொருத்தமான வகையில் பின்பற்றுவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்படும். தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள கொரோனா ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை மேலும் முறையாக தொடர்ந்தும் முன்னெடுக்க கலந்துரையாடலில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

தொற்றுக்குள்ளானவர்கள், தொற்றுக்குள்ளானவர்கள் என சந்தேகிக்கப்படுபவர்கள் மற்றும் அவர்களுடன் பழகியவர்களை மீண்டும் மீண்டும் கடுமையான பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

தொற்றைக் கட்டுப்படுத்துவதில் வெற்றி கண்ட ஏனைய நாடுகளும் இத்தகைய நடைமுறைகளையே பின்பற்றியுள்ளன. தொற்றுக்குள்ளானவர்கள் மற்றும் அவர் களுடன் பழகியவர்களைச் சரியாக இனம்காண முடிந்திருப்பதாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஜனாதிபதியின் ஆலோசகர் லலித் வீரதுங்க, முன்னாள் ஆளுநர் வைத்தியர் சீதா அரம்பேபொல, பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன, இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் வேந்திர சில்வா, பதில் பொலிஸ் மா அதிபர் சீ.டீ. விக்ரமரத்ன, அரச வைத்திய அதிகாரிகளின் சங்கத்தின் அதிகாரிகள், தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப நிறுவனத்தின் தலைவர் ஜயந்த டி சில்வா ஆகியோரும் இந் நிகழ்வில் கலந்துகொண்டார்.

நமது பார்வை
உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com

## இரு கோரிக்கைகளையும் ஏற்கமாட்டார் கோட்டாபய

* நாட்டில் ஏற்பட்டுள்ள பேரிடர் இழப்புகள், அவற்றால் எழுந்துள்ள சட்ட சிக்கல்கள், அரசமைப்புக் குழப்பம் போன்றவற்றைக் கையாள்வதற்காக நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுங்கள் என்கின்றன பிரதான எதிர்க்கட்சிகள்.

* பேரிடர் நெருக்கடியால் நாடாளுமன்றத் தேர்தலை ஒத்திவைக்க வேண்டியதாயிற்று. சட்டத்தில் வரையறை செய்த காலத்துக்குள் அத்தேர்தலை நடத்தி முடிக்கக் கூடிய வாய்ப்புகள் – சாத்தியங்கள் – குறைவு. அதனால் சட்ட நெருக்கடி அல்லது அரசமைப்புக் குழப்பம் ஏற்படலாம். ஆகவே இது குறித்து உயர் நீதிமன்றத்திடம் ஆலோசனை பெறுங்கள் – என்று ஜனாதிபதியை எழுத்து மூலமாகக் கோரியிருக்கின்றது தேர்தல் ஆணையம்.

ஆனால் இந்த இரண்டு கோரிக்கைகளையும் – வேண்டுகோள்களையும் – ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சாதகமாகப் பரிசீலிக்க மாட்டார் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

தனக்கு அறுதிப் பெரும்பான்மை இல்லாத நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுவது தம்மை – நமது தரப்பை – பலவீனப்படுத்தி விடும் எனக் கருதுகின்றார் ஜனாதிபதி கோட்டாபய என்கின்றன உள்வீட்டு வட்டாரங்கள்.

தேர்தல் தாமதிப்பதால் ஏற்படும் நெருக்குவாரங்களைச் சட்ட ரீதியாகக் கையாள்வதற்காக நாடாளுமன்றத்தைக் கூட்டினால், அது தொடர்பான விடயங்களை நாடாளுமன்றத்திலேயே கையாள வேண்டியிருக்கும். அதற்காக சட்டங்களை, சட்டவிதிகளையாக்க வேண்டியிருக்கும். அல்லது அரசமைப்பு திருத்தங்களை கொண்டு வரவேண்டியிருக்கும்.

பெரும்பான்மை இல்லாத நாடாளுமன்றத்தில் இவை எல்லாவற்றையும் செய்வதாயின் எதிரணிகளைத் தாஜா செய்ய வேண்டியிருக்கும். சட்டவிதிகள், அரசமைப்புத் திருத்தங்கள் தொடர்பில் எதிரணி விதிக்கும் நிபந்தனைகளுக்கு எல்லாம் அடிபணிய வேண்டி நேரும்.

இன்றைய நிலையில் அரசியல் செல்வாக்கில் எதிரணி பலவீனப்பட்டுப் போயிருப்பதாகவும், தமது மொட்டுக் கட்சி உச்சச் செல்வாக்கில் இருப்பதாகவும் ஜனாதிபதி கருதுகின்றார்.

இந்தச் சமயத்தில் நாடாளுமன்றத்திலோ, வெளியிலோ எதிரணியின் நிபந்தனைகள் மற்றும் அழுத்தங்களுக்கு அடிபணிவது அல்லது இணங்கிப் போவதற்காக அரசியல் விட்டுக் கொடுப்புக்களைச் செய்வது தமது அரசியல் ஸ்திரத்தைப் பாதித்து விடும் என்று ஜனாதிபதி கருதுகின்றார்.

அதனால், எது, எப்படி வந்தாலும், தேர்தலை நடத்தி, வலிமையுடன் அறுதிப் பெரும்பான்மை மிக்க அரசு ஒன்றை ஸ்தாபித்துக் கொண்டு, அதன் மூலம் அதற்கு முன்னர் நேரடிக்கூடிய அல்லது தேர்ந்திருக்கக் கூடிய சட்டத் தவறுகள் எல்லாவற்றையும் நேர்சீராக்கிக் கொள்ளலாம் என்பது அவரது எண்ணம்.

ஆகையினால் நாடாளுமன்றத்தை மீளக் கூட்டும்படியான அழைப்புக்கு அவர் செவி சாய்க்க மாட்டார் என்பது நிச்சயம்.

அதேபோன்றுதான் உயர்நீதிமன்றத்தின் ஆலோசனையைக் கோருங்கள் என்ற தேர்தல் ஆணையத்தின் பரிந்துரையும் கூட.

இந்த விடயத்தை உயர்நீதிமன்றத்திடம் கொண்டு போக, அது தப்பித்தவறி கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளக் கூட்டி, ஏற்படக் கூடிய அரசமைப்பு நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்கான அரசமைப்புத் திருத்தங்கள், சட்ட ஏற்பாடுகளைச் செய்து கொள்ளுங்கள் என்று வழிகாட்டல் வழங்கிவிட்டால் அதுவும் தமக்கு அரசியல் நெருக்கடியாகி விடும் என அவர் கருதுகின்றார் என்று கூறப்படுகின்றது.

இந்த இரண்டு கோரிக்கைகளையும் அவற்றில் ஒன்றையேனும் ஏற்றுச் செயற்படுவது தமக்கு 'பொல்லைக் கொடுத்து அடியை வாங்கும்' அரசியல் நகர்வாகி விடலாம் என அவர் கருதுவதற்குப் போதிய சாத்தியங்கள் உண்டு.

ஆகையினால், இந்த இரு பரிந்துரைகளை அல்லது கோரிக்கைகளை அவர் ஏற்றுச் செயற்படுத்த மாட்டார் என்பது திண்ணம்.

# யாழ். பல்கலையில் மிகப் பாதுகாப்பான முறையிலும் நேற்றுத் தொடக்கம் கொரோனாப் பரிசோதனைகள்

## மருத்துவ பீடாதிபதி வைத்தியர் ரவிராஜ் தகவல்



யாழ்ப்பாணம்,ஏப்.04

வடக்கு மாகாணத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்கான மருத்துவ பரிசோதனையை இன்றிலிருந்து(நேற்றிலிருந்து) யாழ் பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தில் செய்து கொள்ள முடியும் என மருத்துவ பீடாதிபதி வைத்தியர் ரவிராஜ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடக்கு மாகாணத்தில் கொரோனா தொற்று தொடர்பான மருத்துவ பரிசோதனைகள் இது வரை காலமும் அநுராதபுரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு சோதனைகள் இடம்பெற்றன.

எனினும் தற்போது யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தில் அதனை செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இன்றிலிருந்து மருத்துவ பரிசோதனைகள் இடம்பெறுகின்றன.

சுகாதார அமைச்சு, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் ஆகிய தரப்பினரின் தீவிர முயற்சியிலேயே இந்த பரிசோதனை செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த கொரோனா சந்தேகத்துக்குரிய நோயாளர்கள் தங்கள் மருத்துவ பரிசோதனையை இலகுவாக செய்யக்கூடிய வகையில் இது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மருத்துவ அறிக்கையை சுமார் மூன்று மணி நேரத்துக்குள் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மிகவும் நுணுக்கமான முறையில் பாதுகாப்பான முறையிலும் இந்தப் பரிசோதனைகள் இடம்பெறுகின்றன.

எனவே பல்கலைக்கழகத்தின் ஏனைய ஊழியர்களுக்கும் மாணவர்களுக்கும் எவருக்கும் எவ்வித பாதிப்புகளும் ஏற்படாது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் உறுதிபட தெரிவித்துக் கொள்கின்றேன். - என்றார்.

# அரசு அறிவித்த உதவி மக்களை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டங்களை நடைமுறைப்படுத்த அரசு தீவிரம் காட்ட வேண்டுமென்றும் கோரியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்றுத் தாம் நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

உலக வரலாற்றில் இதுவரை சந்திக்கப்பட்டிராத பாரிய மனித நெருக்கடிக்கு இலங்கைத் தீவும் முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்ற இந்த நிலைமையில் ஆரம்பத்திலேயே எமது மக்கள் அனைவருக்கும் பாரிய உன்னதமான சேவையை வழங்கிக் கொண்டிருக்கும் சகல துறையினருக்கும் எமது மக்களோடு சேர்ந்து நாங்களும் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இப்பொழுது நிலவும் இந்த நெருக்கடி நிலைமையிலே அரசு தொடர்ந்து கொண்டிருக்கின்ற ஊரடங்குச் சட்டத்தின் விளைவாக தங்கள் அன்றாட ஜீவனோபாயத்திற்கான தொழில்களை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ள பலவீனமான சமூகத் தரப்பினர்களுக்குச் சில திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

தினசரி உழைத்துப் பிழைக்கின்ற குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்களை வழங்குவது என அரசு தீர்மானித்து அறிவித்தலையும் மேற்கொண்டது. அந்த அறிவிப்பு வந்து பல நாட்கள் கடந்தும் கூட அதன் முழுமையான பலன் இன்னமும் வடக்கு -கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தமட்டிலே சம்பந்தப்பட்ட மக்களைச் சென்றடையவில்லை என்பது ஒரு பாரதூரமான மனக்குறையாக இருந்து கொண்டிருக்கிறது.

தற்போது வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆகவே இந்த நிலைமைகள் இலங்கைத் தீவின் பல்வேறு பாகங்களிலும் இருந்து கொண்டிருக்கின்றன என்பதனையும் நாங்கள் மனிதாபிமான ரீதியாக பொறுப்புணர்வோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

உலர் உணவுப் பொருள்களை வழங்குகிற விடயத்தைப் பொறுத்தமட்டில் எல்லாக் குடும்பத்திற்கும் அவை உரிய நேரத்தில் போய்ச் சேர வேண்டுமென்பது அவசியமானது. இல்லையெனில் இந்தத் திட்டம் அர்த்தமற்றுப் போய்விடும். இந்தத் திட்டத்தின் கீழ் பலனடையவேண்டிய குடும்பங்கள் உதவிக்காக ஏங்கிக்க கொண்டிருக்கின்றன. அவர்கள் உதவிகளைக் கோரிக் கொண்டிருக்கின்றனர்.

ஆக எங்களுடைய வேண்டுகோள் என்னவென்றால் இந்தத் திட்டம் முனைப்போடு வேகம் கொடுக்கப்பட்டு தீவிரமாகச் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதுதான். இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற கிராம சேவையாளர்களை பொறுத்த மட்டில் அவர்களுக்கு ஆளணிப் பற்றாக்குறை இருந்தால் அதனை இலகுவாக நிவர்த்தி செய்ய முடியும்.

சமூக சேவை நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள், சன சமூக நிலையங்கள், ஆலயங்களோடு இணைந்த சமய மன்றங்களென பல்வேறு தரப்புக்களைச் சேர்ந்தவர்களை தொண்டர்களாக இணைந்து கொள்ள முடியும். ஆகவேதான் எங்களுடைய வேண்டுகோள் என்னவெனில் இந்தத் திட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு உடனடியாகத் தீவிரம் காட்டப்படவேண்டும் என்பதுதான். இது செய்யப்பட்டே ஆகவேண்டும்.

மேலும் மாவட்ட மட்டத்தில் ஒரு நல்லதொரு பொறிமுறை விரைந்து உருவாக்கப்பட வேண்டும். அல்லது ஒரு செயலணி நிறுவப்பட வேண்டும். மக்கள் பசியால் வாடிக் கொண்டிருக்கின்ற நிலைமையில் சில வேளைகளில் அவர்கள் கொரோனோ தாக்கத்தைக் கூட மறந்துவிட்டு பசியோடு போராடுகின்ற நிலைமை இருந்து கொண்டிருப்பதென்பது வேதனைக்குரிய விடயம் என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறோம்.

வறுமைக்கோட்டிற்குட்பட்ட மக்களுக்கு அரசு ஐந்தாயிரம் ருபாவை வழங்குவதாக அறிவித்திருந்தது. அந்தத் தொகை கூட கணிசமான குடும்பங்களுக்கு சரியாகப் போய்ச் சேரவில்லை என எங்களுக்கு கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலைமை ஏனைய மாகாணங்களிலும் இருக்குமென்று தான் நினைக்கின்றோம். ஆகவே இந்த விடயங்களில் தீவிரம் காட்டப்பட வேண்டுமென்று கோருகின்றோம் - என்றார்.

**நாளை**
**06.04.2020**
**திங்கட்கிழமை**
நட்சத்திரம்: பூரம் மு.ப 9.58
திதி : திரயோதசி பி.ப 1.39
இராகுகாலம் : 7.38 - 9.08
சுப நேரம் : 12.08 - 1.38

# கிளர்ச்சியாளர்கள் 20 பேர் வான் தாக்குதலில் மரணம்

## கொரோனாவுக்கு மத்தியிலும் லிபியாவில் உள்நாட்டுப் போர்

லிபியாவில் கொரோனா வைரஸ் பரவி வரும் நிலையில் மிசூராடா நகரில் உள்ள கிளர்ச்சிப் படையின் நிலைகளைக் குறிவைத்து நடத்தப்பட்ட வான்தாக்குதலில் 20 கிளர்ச்சியாளர்கள் உயிரிழந்தனர் என்று அரசுப் படைகள் அறிவித்தன.

வடக்கு ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான லிபியாவில் ஐ.நா. ஆதரவு பெற்ற அரசு படைக்கும், நாட்டின் கிழக்கு பகுதியில் இருக்கும் கிளர்ச்சிப் படைக்கும் இடையே உள்நாட்டு போர் நடந்து வருகிறது. இராணுவ தளபதி கலீபா ஹப்தார் தலைமையிலான கிளர்ச்சிப் படை தலைநகர் திரிபோலியை ஆக்கிரமிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

லிபியாவில் கொரோனா வைரஸ் பரவி வரும் நிலையில் இருதரப்பும் மோதலை நிறுத்திவிட்டு வைரசை ஒழிப்பதில் கவனம் செலுத்த வேண்டுமென ஐ.நா. வலியுறுத்தி வருகிறது.

கிளர்ச்சிப் படை அதனைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து தாக்குதலில் ஈடுபட்டு வருகிறது. அதற்கு அரசு படையும் பதில் தாக்குதல் கொடுக்கிறது.

இந்த நிலையில் தலைநகர் திரிபோலி அருகே மிசூராடா நகரில் சனிக்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலில் ஏவுகணைகள் உள்ளிட் வைக்கப்பட்டிருந்த 3 ஆயுதக் கிடங்குகளும் நிர்மூலமாக்கப்பட்டன என்று அரசு அறிவித்துள்ளது.

# கொரோனா தடுப்பு மருந்து எலி பரிசோதனை வெற்றி

## அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் முன்னேற்றம்

கொரோனா வைரசுக்கான தடுப்பு மருந்து விலங்குகளில் வெற்றிகரமாகச் செயற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மருந்தை எலிக்குக் கொடுத்து நடத்தப்பட்ட சோதனையில் வெற்றி கிடைத்துள்ளது என்று அமெரிக்காவில் உள்ள பீட்டர்ஸ்பர்க் மருத்துவ பல்கலைக்கழகத்தை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

கொரோனா நோய் வேகமாக பரவி வருவதை அடுத்து அதை குணப்படுத்தும் மருந்துகளையும், தடுப்பு மருந்துகளையும் கண்டுபிடிக்க உலக சுகாதார நிறுவனத்தின் ஆதரவுடன் பல நாடுகளில் தீவிர முயற்சிகள் நடக்கின்றன

அமெரிக்காவில் ஏற்கனவே ஒரு தடுப்பு மருந்து கண்டறியப்பட்டு அது விலங்குகளில் பரிசேதிக்கப்படாமல் நேரடியாகவே மனிதர்களுக்கு வழங்கப்பட்டுப் பரிசோதிக்கப்பட்டது.

இந்த நிலையில் அமெரிக்காவில் உள்ள பீட்டர்ஸ்பர்க் மருத்துவ பல்கலைக்கழகத்தை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்துள்ளனர்.

பேராசிரியர் ஆன்ட்ரியோ கம்போட்டா, லூயிஸ் பாலோ தலைமையிலான நிபுணர்கள் குழு இந்த மருந்தை உருவாக்கி உள்ளது.

இதே குழுவினர் 2003ஆம் ஆண்டு சார்ஸ் நோய்க்கும், 2014ஆம் ஆண்டு மெர்ஸ் நோய்க்கும் மருந்து கண்டுபிடித்தனர்.

தற்போது பரவி வரும் கொரோனா வைரஸ் சார்ஸ் மற்றும் மெர்ஸ் குடும்பத்தை சேர்ந்ததாகும். எனவே கடந்த கால முறையிலேயே நிபுணர்கள் குழு கொரோனாவுக்கும் மருந்து கண்டுபிடிக்க ஆய்வு நடத்தியது. அதில் அவர்கள் வெற்றி கண்டுள்ளனர்.

இந்த தடுப்பு மருந்தை எலிக்கு செலுத்தி பரிசோதித்தனர். அது வெற்றிகரமாக செயல்படுகிறது. அதாவது உடலில் கொரோனா வைரஸ் கிருமியை எதிர்த்து போராடும் ஆற்றலை உருவாக்கி அதை அழிக்கிறது. எனவே இந்த மருந்தை மனிதனுக்கு பயன்படுத்தினால் நோய் தாக்குதலை தடுத்து விடலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறினார்கள்.

இந்த மருந்து பயன்பாட்டுக்கு வருவதற்கு இன்னும் பல தடைகளைத் தாண்ட வேண்டியிருக்கும். அமெரிக்க உணவு மருந்து கட்டுப்பாட்டு அமைப்பு, புதிய மருந்து ஆய்வு அமைப்பு ஆகியவற்றின் அனுமதி பெறப்பட்டபின்னரே மனிதர்களில் இந்தப் மருந்து சோதனை செய்யப்படும்.

மனிதர்களில் நடத்தப்படும் சோதனை வெற்றிபெற்ற பின்னரே அது பயன்பாட்டுக்கு அனுமதிக்கப்படும்.

அனைத்து பணிகளும் முடிந்து பயன்பாட்டுக்கு வருவதற்கு இன்னும் ஒரு வருட காலம் வரை ஆகலாம் என்று நிபுணர் குழுவினர் கூறினார்கள்

# 100 தலிபான்களை விடுவிக்க ஆப்கானிஸ்தான் அரசு முடிவு

20 அரச படையினரை விடுவிக்க தலிபான்கள் சம்மதம் தெரிவித்த நிலையில், சிறைகளில் உள்ள 100 தலிபான் கைதிகளை விடுதலை செய்ய ஆப்கானிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளது.

ஆப்கானிஸ்தான் உள்நாட்டு போரை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் தலிபான் அமைப்புக்கும், அமெரிக்க அரசுக்கும் இடையே வரலாற்று சிறப்புமிக்க ஒப்பந்தம் பெப்ரவரி மாத இறுதியில் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தத்தில் பரஸ்பரம் கைதிகளைப் பரிமாறிக் கொள்வது என்று முடிவெடுக்கப்பட்டது. தலிபான்கள் பிடியில் இருக்கும் படையினர் மற்றும் அதிகாரிகளை விடுவிக்க அரசு தலிபான் கைதிகளை விடுதலை செய்யும் எனத் தெரிவிக்கப்பட்டது..

ஆனால் இந்த விவகாரத்தில் அதிபர் அஷ்ரப்கனி அரசுக்கும், தலிபான் அமைப்புக்கும் இடையே உடன்பாடு ஏற்படாததால் இழுபறி நீடித்து வந்தது.

இது தொடர்பாக தலிபான்களுடன் பேச்சு நடத்த அரசு சார்பில் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்தக் குழுவுக்கும், தலிபான்களுக்கும் இடையே நேரடி பேச்சு அண்மையில் தொடங்கியது.

இதில் முதற்கட்டமாக தங்கள் பிடியில் உள்ள 20 அரச படையினரை விடுவிக்க தலிபான்கள் சம்மதம் தெரிவித்தனர். அதற்குப் பிரதிபலனாக சிறைகளில் உள்ள 100 தலிபான் கைதிகளை விடுதலை செய்ய ஆப்கானிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளது.

இந்த தகவலை அதிபர் அலுவலகத்தை சேர்ந்த மூத்த அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தினார்.

## கொலையாட்டத்தை நிறுத்தாத கொரோனா

# 64 ஆயிரத்தை எட்டியது சாவு

### அமெரிக்காவில் மட்டும் 3 லட்சம் பேருக்குத் தொற்று

உலகம் முழுவதும் கொரோனா பாதிப்பால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 64 ஆயிரமாக உயர்ந்தது. சுமார் 12 லட்சம் பேர் இது வரையில் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 2 லட்சத்து 43 ஆயிரம் பேர் குணமடைந்துள்ளனர்.

உலகில் உள்ள 204 நாடுகள் மற்றும் தனியாட்சிப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள கொவிட் - 19 தொற்றால் உயிரிழந்தவர்ளின் எண்ணிக்கை கடந்த ஒரு வார காலத்தில் இரட்டிப்பாகியிருக்கிறது. நேற்று நள்ளிரவு வரையில் 63 ஆயிரத்து 897 பேர் உயிரிழந்தனர். இன்று காலைக்குள் அது 64 ஆயிரத்தை எட்டிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

11 லட்சத்து 82 ஆயிரத்து 398 பேர் இந்த வைரஸால் தாக்கப்பட்டுள்ளனர். கூடுதலான பாதிப்பு அமெரிக்காவில் ஏற்பட்டுள்ளது. 3 லட்சம் பேருக்கு அங்கு தொற்று ஏற்பட்டுள்ளது. 8 ஆயிரத்து 160 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஸ்பெயின் நாட்டில் தொற்று ஏற்பட்டவர்களின் எண்ணிக்கை இத்தாலியின் எண்ணிக்கையைத் தாண்டி அமெரிக்காவுக்கு அடுத்த நிலையை எட்டியுள்ளது. 1 லட்சத்து 244 ஆயிரத்து 736 பேர் அங்கு தொற்றுக்குள்ளாகியுள்ளனர். 11 ஆயிரத்து 744 பேர் உயிரிழந்துள்ளனர்.

இருப்பினும் தொற்றால் ஆகக் கூடுதலான உயிரிழப்பு இன்னும் இத்தாலியிலேயே காணப்படுகின்றது. 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் அங்கு உயிரிழந்துள்ளனர். நேற்றைய 24 மணி நேரத்தில் 681 பேர் உயிரிழந்தமையைத் தொடர்ந்து 15 ஆயிரத்து 362 பேர் அங்கு மொத்தமாக உயிரிழந்துள்ளனர்.

ஜேர்மனியிலும் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்தை எட்டிவருகின்றது. எனினும் அங்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 330 என்கிற குறைவான நிலையிலேயே காணப்படுகின்றது.

மாறாக பிரான்ஸில் 90 ஆயிரம் பேருக்குத் தொற்று ஏற்பட்டபோதிலும் அங்கு 7 ஆயிரத்து 560 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஈரானில் 3 ஆயிரத்து 467 பேரும் பிரிட்டனில் 4 ஆயிரத்து 313 பேரும் உயிரிழந்திருக்கின்றனர். நெதர்லாந்தில் ஆயிரத்து 651 பேரும் பெல்ஜியத்தில் ஆயிரத்து 283 பேரும் உயிரிழந்திருக்கின்றனர்.

உலகம் முழுவதும் நேற்று ஒரு நாளில் மட்டும் 65 ஆயிரத்து 755 பேருக்குப் புதிதாகத் தொற்று ஏற்பட்டுள்ளது.

## அரசு நடைமுறைப்படுத்திய கொரோனா தடுப்பு

# விதிகளைப் புறந்தள்ளி நடந்த சீன நபருக்கு சிறை தண்டனை

வெளிநாடு சென்று திரும்பிய தகவலை மறைத்தது மட்டுமல்லாமல் கொரோனா சிகிச்சைக்கு ஒத்துழைப்பு தர மறுத்த குற்றத்திற்காக சீனாவில் நபர் ஒருவருக்கு ஒன்றரை ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

உலகையே உலுக்கி வரும் கொரோனா வைரஸ் கடந்த ஆண்டு டிசெம்பர் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டது.

உலகம் முழுவதும் தற்போது ஆட்டிப் படைத்து வரும் இந்த நோய் அந்நாட்டிலும் 3 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களின் உயிரைக் காவு கொண்டது.

கொரோனா பரவத்தொடங்கியது முதலே சீனாவில் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. குறிப்பாக ஹூபேய் மாகாணம் முழுவதும் மூடப்பட்டது..

அரசு விதித்த கட்டுப்பாடுகளை மீறிய பலருக்கும் தற்போது சிறைத் தண்டனைகள் விதிக்கப்பட்டு வருகிறது.

ஹேனன் மாகாணம் ஜெங்ஜோ நகரை சேர்ந்த ஜிய் கடந்த மார்ச் முதலாம் முதல் 6ஆம் திகதி வரை வெளிநாட்டில் இருந்தார். மார்ச் 7ஆம் திகதியே சொந்த ஊர் திரும்பினார்

தான் வெளிநாடு சென்று நாடு திரும்பிய தகவலை அவர் நகர அதிகாரிகளிடம் தெரிவிக்காமல் மறைத்துள்ளார்.

மேலும், கொரோனா அச்சுறுத்தலில் இருத்தலில் பாதுகாப்பாக இருக்க அரசு அறிவுறுத்திய சுய தனிமைப்படுத்துதலையும் அவர் கடைபிடிக்கவில்லை.

மாறாக வெளிநாட்டில் இருந்து திரும்பிய அடுத்த நாளே (மார்ச் 8) தனது அலுவலகத்திற்குச் சென்றுள்ளார்.

அலுவலகத்திற்கு சென்ற அவருக்கு மார்ச் 9ஆம் திகதி காய்ச்சல், இருமல் உள்ளிட்ட கொரோனா அறிகுறிகள் ஏற்பட்டன. இது குறித்து தகவலறிய அப்பகுதி பொலிஸார் மார்ச் 10ஆம் திகதி ஜிய்யை செல்போனில் தொடர்பு கொள்ள முயற்சி செய்தனர்.

ஆனால் அவர் போன் அழைப்புக்குத் தனது தாயாரைக் கொண்டு பதிலளித்தார் ஜிய்யின் தாயார் தனது மகன் வெளிநாடு திரும்பிய தகவல் மட்டுமல்லாமல் மகனுக்கு ஏற்பட்ட கொரோனா அறிகுறிகள் குறித்த தகவலையும் போலீசிடமிருந்து மறைத்தார்.

இந்த சம்பவம் நடந்து சில நாட்களில் ஜிய் - க்கு கொரோனா வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டது. மேலும், அவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்த 40 பேரும் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இதையடுத்து, வெளிநாடு சென்று திரும்பிய தகவலை மறைத்தது, சுய தனிமைப்படுத்தலுக்கு உள்படாதது, கொரோனா அறிகுறிகள் இருந்தபோது தானாக முன்வந்து சிகிச்சைக்கு ஒத்துழைப்பு அளிக்காதது ஆகிய குற்றங்களுக்காக ஜிய் மீது வழக்கு தொடரப்பட்டது.

விசாரணை நேற்று நீதிமன்றத்திற்கு வந்தது. அப்போது ஜிய் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டன. அவருக்கு ஒன்றரை ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டது

# பெண்கள் மீதான வன்முறைகள் ஊரடங்குக் காலத்தில் அதிகரிப்பு

## இந்திய மகளிர் ஆணையகம் தெரிவிப்பு

இந்தியாவில் 21 நாள்கள் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட நாளில் இருந்து கடந்த முதலாம் திகதிக்குள் பெண்களுக்கு எதிராக 257 வன்முறைகள் நிகழ்ந்துள்ளதாக தேசிய மகளிர் அணையகம் தெரிவித்துள்ளது. .

கொரோனா தடுப்பு நடவடிக்கையாக ஏப்ரல் 12 ஆம் திகதி வரை இந்தியா முழுவதும் ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் இருக்கின்றது.

இதனால் வீட்டிலேயே அடைந்து கிடக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள கணவர்களால் பிரச்சினைகள் ஏற்பட்டு அவை குடும்ப வன்முறைகளாக முடிகின்றன என்கிறது மகளிர் ஆணையகம்.

இதுகுறித்துதேசியமகளிர்ஆணையத்தின் தலைவி ரேகா சர்மா கூறிய தாவது:–

குடும்பத்துக்குள் ஏற்பட்ட சண்டை தொடர்பாக 69 முறைப்பாடுகள் வந்துள்ளன. உண்மையில் சொல்லப்போனால் இதைவிட அதிகமான முறைப்பாடுகள் வந்திருக்க வேண்டும்.

ஊரடங்கு காரணமாக பெண்கள் எங்களிடம் முறைப்பாடு அளிக்க வர முடிவதில்லை. பொலிஸ் நிலையத்துக்கு செல்லவும் அச்சப்படுகிறார்கள். கணவரை பொலிஸில் பிடித்து கொடுத்தால் மாமியார் தங்களை சித்ரவதை செய்வார்களோ என்று அஞ்சுகிறார்கள். காவலில் இருந்து கணவர் வெளியே வந்தால் மீண்டும் பிரச்சினை பெரிதாகும் எனவும் பயப்படுகிறார்கள்.

முன்பு சண்டை வந்தால் பெற்றோர் வீட்டுக்கு சென்று சில நாள்கள் தஞ்சம் அடைய முடியும். ஆனால் தற்போது ஊரடங்கு அமலில் இருப்பதால் அங்கும் செல்ல முடியாமல் சண்டை, சச்சரவுக்களுக்கு இடையே கணவர் வீட்டுக்குள்ளேயே பெண்கள் முடங்கிக் கிடக்க வேண்டியுள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

# ஊரடங்கை மீறியோருக்கு யோகா செய்யும் தண்டனை

## கர்நாடகாவில் பொலிஸ் புதிய நடைமுறை



கர்நாடகாவில் ஊரடங்கை மீறி வெளியேவந்தவர்களையோகாதண்டனை வழங்கினர் கர்நாடகப் பொலிஸார். இந்திய பிரதமர் மோடி இன்று அழைப்பு விடுத்துள்ள விளக்கேற்றலுக்கான மெழுகுவர்த்தியையும் அவர்கள் வழங்கினர்.

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த சமூக இடைவெளி அவசியம் என்பதால் பிரதமர் மோடியின் அறிவிப்புப்படி, நாடு முழுவதும் 21 நாள்கள் ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் உள்ளது.

இதனால் மக்கள் தேவையின்றி வெளியே வரத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருள்கள் கொண்டு செல்ல மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும் பல மாநிலங்களிலும் மக்கள், குறிப்பாக இளைஞர்கள் வீடுகளை விட்டு வெளியே சுற்றி திரியும் சம்பவங்கள் நடைபெறுகின்றன.

அவ்வாறு வெளியே சுற்றித் திரிபவர்களுக்கு தோப்புக்கரணம் போடுதல் உள்ளிட்ட பல தண்டனைகளைப் பொலீஸார் வழங்கி வருகின்றனர்.

இந்த நிலையில் கர்நாடக மாநிலம் கல்பருகியிலும் இளைஞர்கள் உள்ளி

# ட்ரம்புடன் மோடி நேற்று கொரோனா தடுப்பு பேச்சு



கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக அமெரிக்க அதிபர் டிரம்புடன் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி போனில் பேசியுள்ளார்.

உலகையேஉலுக்கிவரும்கொரோனா வைரஸ் கடந்த ஆண்டு டிசெம்பரில் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டது. உலகம் முழுவதும் 59 ஆயிரத்து 128 பேர் இந்த வைரசால் உயிரிழந்துள்ளனர். குறிப்பாக அமெரிக்காவில் கொரோனா தற்போது கோரத்தாண்டவம் ஆடி வருகிறது.

அந்த நாட்டில் தற்போதைய நிலவரப்படி, 3 லட்சம் பேருக்கு வைரஸ் பரவியுள்ளது. வைரஸ் தாக்குதல் காரணமாக 7 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். நாளுக்கு நாள் அதிகரித்துவரும் வைரஸ் உயிரிழப்புகளை கட்டுப்படுத்த முடியாமல் அமெரிக்கா திணறி வருகிறது.

இந்தியாவிலும் கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்து வருவதால் பொதுமக்கள் கூடுவதை தவிர்க்க வேண்டும் என்று மத்திய அரசு எச்சரித்து வருகிறது. 21நாட்கள் ஊரடங்கு தடை உத்தரவை மீறியும் சிலர் அலட்சியமாக செயல்படுவதால் நோய் தொற்று அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக அமெரிக்க அதிபர் டிரம்புடன் பிரதமர் மோடி போனில் பேசினார்.

கொரோனாவுக்கு எதிராக போராட, இரு நாடுகளும் முழு பலத்தையும் வழங்க ஒப்புக்கொண்டோம் என இந்தப் பேச்சுக் குறித்து மோடி தெரிவித்தார். தற்போதைய நிலையில் இந்த உரையாடல் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

இதேவேளை, கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து பிரேசில் அதிபர் ஜேர் பல் சோனரோவுடனும் பிரதமர் மோடி தொலைபேசியில் உரையாடினார்.

இதுதொடர்பாக, பிரதமர் மோடி டுவிட்டரில் வெளியிட்டுள்ள செய்தியில், கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக பிரேசில் அதிபர்ஜேர்பல்சோனரோவுடன்தொலைபேசியில் உரையாடினேன். கொரோனாவுக்கு எதிராக போராட இருநாடுகளும்முழுபலத்தையும்வழங்க ஒப்புக்கொண்டோம் என பதிவிட்டுள்ளார்.

# ஏப்ரல் 14க்கு பின்னர்தான் முக்கியமான காலகட்டம்

## கொரோனா தடுப்பு குறித்து பிரதமர் மோடி தெரிவிப்பு

கொரோனா தடுப்பு நடவடிக்கையாக இந்தியாவில் 21 நாள்களுக்கு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளதுநிலையில்அதுமுடிந்த பின்னர்தான், ஏப்ரல் 14ஆம் திகதிக்குப் பின்னர்தான் இந்தப் விவகாரத்தில் மிக முக்கியமான கால கட்டம் என்று தெரிவித்திருக்கிறார் பிரதமர் மோடி.

மக்களிடத்தில் தன்னம்பிக்கை ஊட்டும் நேர் வியங்களைக் கொண்டு சேருங்கள் என்று பிரதமர் மோடி வீடியோ கான்பரன்சிங் மூலம் இந்தியாவின் பிரபல விளையாட்டு வீரர்களைக் கேட்டுக் கொண்டார்.

அந்த வீடியோ கான்பரன்சிங்கில் கிரிக்கெட் நட்சத்திரம் சச்சின் டெண்டுல்கர் பிரதமரிடம், ஊரடங்கின் பின்னர், ஏப்ரல் 14க்குப் பிறகு எப்படி நிர்வகிக்கப் போகிறோம், சமாளிக்கப்போகிறோம் என்பதுதான் முக்கியமானது என்று கூறியுள்ளார்.

பிரதமர் மோடியுடன் மேற்கொண்ட ஒரு மணி நேர விடியோ கான்பரன்சிங் கலந்துரையாடல் குறித்து, சச்சின் டெண்டுல்கர் தெரிவித்ததாவது:–

ஏப்ரல் 14ஆம் திகதிக்குப் பிறகான காலக்கட்டம் கோவிட்–19க்கு எதிரான போரில் நமக்கு முக்கியமான காலக்கட்டமாகும். 14ஆம் திகதிக்குப் பின்னர் நம் பாதுகாப்பை கைவிட்டு விடக்கூடாது அந்தக் காலக்கட்டத்தை எப்படி மேலாண்மைசெய்யப்போகிறோம் என்பதுதான் முக்கியம் என்ற என் கருத்தை பிரதமர் மறு உறுதி செய்தார்.

மேலும் நாங்கள் பேசியபோது உடல் ரீதியான ஆரோக்கியத்துடன் மனரீதியான ஆரோக்கியமாக இருப்பதும் முக்கியம் என்று பேசினோம், நான் வீட்டில் என்ன மாதிரியான பயிற்சிகளை மேற்கொள்கிறேன் என்று பேசினேன்.

விளையாட்டுப் போட்டிகளில் எப்படி டீம் ஸ்பிரிட் நம்மை வெற்றிக்கு இட்டுச் செல்கிறதோ அதே போல் நாம் அனைவரும் இந்தக் காலக்கட்டத்தில் ஒரு தேசமாக டீம்ஸ்பிரிட்டுடன் ஒரு அணியாகத் திரண்டு தேசமே கோவிட்–19க்கு எதிராகப் போரிட்டு அதனை வெல்ல வேண்டும் என்று பேசினோம் – என்றார்.

## ஊரடங்கின் முழுப் பயனையும் அனுபவிக்க

# பெரியளவிலான பரிசோதனையை உடனடியாக நடத்துவது அவசியம்

## காங்கிரஸ் செயலாளர் வலியுறுத்து

ஊரடங்கால் முடக்கப்பட்ட இந்தியாவில் இருந்து நமக்கு நல்ல பயன்கள் கிடைப்பதற்கு மிகப்பெரிய அளவில் மக்களுக்கு கொரோனா தொற்றுப் பரிசோதனையை உடனடியாக நடத்துவது அவசியம் என்று காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி மத்திய அரசிடம் வலியுறுத்தியுள்ளார்.

இந்தியாவில் கடந்த 10 நாள்களாக ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் உள்ளது. கொரோனா பரவலைத் தடுப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இந்தியாவில் தொற்று வேகமாகப் பரவி வருகின்றது. 3 ஆயிரத்து 82 பேருக்கு இதுவரையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 86 பேர் உயிரி



ழந்திருக்கின்றனர்.

இந்த நிலையில் ஊரடங்கின் பயன் முழுமையாகக் கிடைக்க மக்கள் அனைவருக்கும் கொரோனா குறித்த பரிசோதனை அவசியம் என்று காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி வலியுறுத்தியுள்ளார். இது குறித்து அவர் ட்விட்டரில் கூறியிருப்பதாவது:

மக்களில்எத்தனைபேருக்குகொரோனா வைரஸ் என்பதை அறிந்துகொள்ள மிகப்பெரிய அளவில் பரிசோதனையை நாம் உடனடியாக நடத்துவது அவசியம். இந்த பரிசோதனையின் மூலம் நாம் மிகவும் மிதிப்பு மிக்க தகவல்களான கொரோனா வைரஸின் தீவிரத்தன்மை, கொரோனா வைரஸின்திரள், எதைநோக்கி அது செல்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும்.

பெரியளவிலான கொரோனா பரிசோதனைக்கான மருத்துவக் கட்டமைப்பு வசதிகளை நாட்டில் உருவாக்க வேண்டும்.

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் பிரிவில் இருக்கும் தாதியர்கள், மருத்துவப்பணியாளர்களுக்கு பாதுகாப்பு கவசம் இல்லை, அவர்களின் ஊதியமும் குறைக்கப்படுகிறது. இந்த நேரத்தில் மருத்துவப் பணியாளர்கள் அனைவருக்கும் நாம் ஆதரவு அளிக்க வேண்டும்.

மக்களுக்கு அவர்கள்தான் வாழ்க்கையை மீட்டுத்தருபவர்கள், போர்க்களத்தில்சண்டையிடும்போர்வீரர்கள். இவ்வாறு பிரியங்கா காந்தி தெரிவித்துள்ளார்




ஃபெர்னான்டோ டுயார்டே

# கொரோனா வைரஸுக்கான தடுப்பு மருந்துகளை

# பணக்கார நாடுகள் பதுக்கி வைக்குமா?

உலகெங்கிலும் கொரோனா வைரஸ் தொற்றை ஒழிப்பதற்கான தடுப்பு மருந்தை உருவாக்கும் முயற்சியில் 44 ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆராய்ச்சியில் மூலக்கூறு மரபியலாளர் கேட் ப்ரோடெரிக் ஈடுபட்டுள்ளார்.

அமெரிக்காவில் உள்ள உயிரி தொழில்நுட்ப நிறுவனமான இன்னோவியோவில் மருத்துவர் கேட் ஆராய்ச்சியாளராகப் பணிபுரிகிறார்.

இந்நிறுவனம் டிசம்பர் மாதத்திற்குள் 10 லட்சம் தடுப்பு மருந்துகளைத் தயாரித்து உற்பத்தி செய்ய முடிவு செய்துள்ளது. ஆனால் இந்த 10 லட்சம் டோஸ்களை எங்கு, யார் பெற்றுக்கொள்வார்கள், யாருக்குக் கிடைக்கும்?

மருத்துவர் கேட்டின் சகோதரி பிரிட்டனில் செவிலியராக பணிபுரிகிறார். ”எனது சகோதரி தினமும் கோவிட் 19 வைரஸால் பாதிக்கப்பட்டவர்களுடன் போராடி வருகிறார். அவர்கள் அனைவருக்கும் எப்படித் தடுப்பு மருந்துகளை அனுப்ப முடியும்? இந்தத் தடுப்பு மருந்து இப்போதே தயாராக வேண்டும்” என்கிறார் கேட்.

### தடுப்பு மருந்து பதுக்கப்படுமா?

ஆனால் இன்னோவியோ போன்ற நிறுவனம் உருவாக்கும் தீர்வுகளைப் பணக்கார நாடுகளால் யாருக்கும் தெரியாமல் பதுக்கி வைக்கும், வாய்ப்புள்ளது என்ற கவலைகள் உள்ளன. அப்படி கவலையை வெளிப்படுத்தும் குரல்களில் ஒன்று தொற்று நோயியல் நிபுணர் சேத் பெர்க்லி என்பவரின் குரல்.

தடுப்பு மருந்து கிடைப்பதில் பாரபட்சமான இடைவெளி தோன்ற வாய்ப்புள்ளது என்கிறார் அவர்.



உலகின் 73 ஏழ்மையான நாடுகளில் நோய்த் தடுப்பு பணியில் ஈடுபட்டுள்ள பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் உலகளாவிய சுகாதார கூட்டமைப்பான 'வேக்சின் அலையன்ஸ்' (Gavi) என்ற அமைப்பின் தலைமை நிர்வாக அதிகாரி அவர். உலக சுகாதார நிறுவனம் இந்த கூட்டமைப்பின் உறுப்பினர்களில் ஒன்று.

இவ்வாறான நெருக்கடி நிலையில் செல்வந்த நாடுகளில் தடுப்பு மருந்து அவசியம் தேவைப்படும் மக்களுக்கு மட்டுமல்லாமல் ஏழை நாடுகளில் தடுப்பு மருந்து தேவைப்படுபவர்களுக்கும் போதுமான எண்ணிக்கையில் இவை சென்று சேருவதை உறுதி செய்வதே சவால் என்று பெர்க்லி பிபிசியிடம் கூறினார்.

ஜெர்மன் பயோடெக்னாலஜி நிறுவனமான க்யூர்வாக் உருவாக்கியுள்ள தடுப்பு மருந்தை ஏற்கனவே அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தனது நாட்டு மக்களுக்காக மட்டும் பிரத்தியேகமாகப் பெற முயற்சி செய்து அதுதோல்வியில்முடிந்ததாக ஜேர்மன் நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

### ஹெபடைடிஸ் பி

நோய்த்தடுப்பு மருந்தை முதலில் பணக்கார நாடுகள் மட்டுமே வாங்கி பயன்படுத்துவதால் ஏழை நாடுகள் கடுமையாகப் பாதிக்கும் என்ற இந்த அச்சத்திற்கு ஹெபடைடிஸ்பிதடுப்பூசியேசிறந்த எடுத்துக்காட்டு.

கல்லீரல் புற்றுநோய்க்கு முக்கிய காரணம் ஹெபடைடிஸ் பி என்ற வைரஸ். இது எச்.ஐ.வி.யை விட 50 மடங்கு அதிகம் தொற்றக்கூடியது என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. 2015ஆண்டு நிலைவரப்படி உலகளவில் 257 மில்லியன் மக்கள் ஹெபடைடிஸ் பி நோய்த் தொற்றுடன் வாழ்ந்து வந்ததனர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நோய்க்கு எதிரான தடுப்பு மருந்துகள் 1982 ஆம் ஆண்டிலேயே பணக்கார நாடுகளுக்குக் கிடைத்தன. ஆனால் 2000ஆம் ஆண்டுவரை உலகின் ஏழ்மையான நாடுகளில் 10% க்கும் குறைவானவர்களுக்கு மட்டுமே ஹெபடைடிஸ் பி தடுப்பு மருந்து கிடைத்துள்ளது.

பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் ஆகியோரால் 2000 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட வேக்சின் அலையன்ஸ் அமைப்பு, அரசாங்கங்கள் மற்றும் மருந்து நிறுவனங்களுடனான ஒப்பந்தங்கள் மூலமாகப் பிற தடுப்பு மருந்துகளில் இந்த பின்னடைவைக் கணிசமாகக் குறைத்தது.

நார்வே நாட்டை சேர்ந்த கொயலேன் ஃபார் எபிடமிக் பிரிப்பேர்ட்னஸ் இன்னோவேன் (Cepi) (என்ற அமைப்பும் தடுப்பு மருந்து எல்லா நாட்டு மக்களுக்கும் கிடைப்பதற்காக வெளிப்படையாகக் குரல் கொடுக்கிறது.

### அமெரிக்காவின் அணுகுமுறை எப்படி உள்ளது?

2007 ஆம் ஆண்டு அமெரிக்காவின் மெர்க் என்ற ஆராய்ச்சி மையம் எச்.பி.வி. என்ற நோய்க் கிருமிதொற்றைப்போக்குவதற்கான கார்டசில் என்ற தடுப்பு மருந்தை உருவாக்கியது. 2014 ஆம் ஆண்டு இந்த தடுப்பு மருந்தைப் பயன்படுத்துவதற்கான ஒப்புதலை அமெரிக்க அதிகாரிகள் வழங்கினார்.

உலகளவில் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க்கு இந்த எச்.பி.வி. கிருமி தொற்றே முக்கியகாரணம். ஆனால் 2019ம் ஆண்டு வரை குறைந்த வருமானம் கொண்ட 13 நாடுகளுக்கு மட்டுமே இந்த கார்டசில் தடுப்பு மருந்து கிடைத்திருக்கிறது. இதற்கு யார் காரணம்?

உலகளாவிய அளவில் வளரும் நாடுகளில் கருப்பை வாய்ப் புற்றுநோயால் 85 வீத இறப்புகள் நிகழ்கின்றன.

இந்த தடுப்பு மருந்துப் பற்றாக்குறை ஏன் நிகழ்கிறது என்பதைப் புரிந்து கொள்ள தடுப்பு மருந்துகள் எப்படி விற்பனை செய்யப்படுகின்றன என்பதைப் பார்க்க வேண்டும்.

### தடுப்பு மருந்துகளும் மருந்து தொழிற்சாலைகளும்

தடுப்பு மருந்துகள் மட்டுமே மருந்து துறையின் வருமானம் அல்ல. சிகிச்சை அளிக்க பயன்படுத்தும் மருந்துகளை விட தடுப்பு மருந்துகளை உருவாக்குவது மிகுந்த இடர்ப்பாடு மிகுந்த வணிகம்.

தடுப்பு மருந்து தயாரிக்க அதிக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு செலவுகள் செய்ய வேண்டும். பரிசோதனை மேற்கொள்ள மிகவும் சிக்கலான விதிமுறைகளைப் பின்பற்றவேண்டும்.

மேலும் பொதுச் சுகாதார நிறுவனங்கள், மற்றும் முக்கிய வாடிக்கையாளர்கள் பலர் தனியார் வாடிக்கையாளர்களை விட மிகக் குறைந்த விலையில் தடுப்பு மருந்துகளை வாங்குகிறார்கள். எனவே சாதாரண மருந்துகளை விடத் தடுப்பு மருந்துகள் மிகக் குறைந்த லாபத்தையே ஈட்டுகின்றன. ஒருவர் தன் வாழ்வில் ஒரு முறைதான் தடுப்பு மருந்து பயன்படுத்துவார் என்பதால் தடுப்பு மருந்துகளில் பெரிய லாபம் இல்லை என்கின்றனர் மருத்துவ நிபுணர்கள்.



1967 இல் அமெரிக்காவில் மட் டும் 26 தடுப்பு மருந்து தயாரிப்பு நிறு வனங்கள் இருந்தன. ஆனால் 2004 ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கை 5 ஆகக் குறைந்துள்ளது. அந்நிறுவ னங்கள் நோய்த் தடுப்பு மற்றும் பாதுகாப்பில் கவனம் செலுத்த விரும்பாமல், நோய் ஏற்பட்டவுடன் அளிக்க வேண்டிய சிகிச்சைக்கான மருந்துகளில் கவனம் செலுத்துகின்றன.

(14 ஆம் பக்கம் பார்க்க)

> **தடுப்பு மருந்துகள் மட்டுமே மருந்து துறையின் வருமானம் அல்ல. சிகிச்சை அளிக்க பயன்படுத்தும் மருந்துகளை விட தடுப்பு மருந்துகளை உருவாக்குவது மிகுந்த இடர்ப்பாடு மிகுந்த வணிகம். தடுப்பு மருந்து தயாரிக்க அதிக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு செலவுகள் செய்யவேண்டும். பரிசோதனை மேற்கொள்ள மிகவும் சிக்கலான விதிமுறைகளைப் பின்பற்றவேண்டும்.**



# வாசனைகளை முகர முடியாததும், சுவை உணர்வை இழப்பதும்

# கொரோனா அறிகுறியா?

வாசனைகளை முகர முடியாமல் போவதும், உணவுப் பொருட்களின் சுவைகளை அறிய முடியாமல் போவதும்கூட கொரோனா தொற்றின் (கோவிட் - 19) அறிகுறிகள் என்பது பிரிட்டன் ஆய்வாளர்களின் கூற்று.

தங்களுக்கு கோவிட் - 19இன் அறிகுறிகள் இருக்கலாம் என்று நினைத்து, அறிகுறிகளை ஒரு செயலியில் பதிவிட்ட நான்கு இலட்சம் மக்களின் தகவல்களை லண்டனில் உள்ள கிங்க்ஸ் கல்லூரி குழு ஒன்று ஆய்வு செய்தது.

ஆனால், இவ்வாறு வாசங்களை முகர முடியாமல் போவதும், சுவை உணர்வை இழப்பதும், சாதாரண சளி போன்ற ஏனைய சுவாசப் பிரச்சினைகளின் அறிகுறிகளாக இருப்பவையே.



மிலே் ராபட்ர்ஸ்
(உடல்நலப்பிரிவு ஆசிரியர்,
பிபிசி நியூஸ் ஒன்லைன்)

> உங்களுக்கோ, உங்கள் வீட்டில் வசிப்ப வருக்கோ, சமீப காலத்தில் தொடர் இருமல் மற்றும் அதிக காய்ச்சல் இருந்தால், பிறருக்கு கொரோ னாவை பரப்புவதை தடுக்கும் விதமாக வீட்டிலேயே இருக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

காய்ச்சலும், இருமலுமே, இந்த வைரஸ் தாக்குதலின் முக்கிய அறிகுறிகள் என்றும், அவை இருக்கின்றனவா என்று கவனித்து, தக்க நடவடிக்கைளை மக்கள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் நிபுணர்கள் கூறுகிறார்கள்.

உங்களுக்கோ, உங்கள் வீட்டில் வசிப்பவருக்கோ, சமீப காலத்தில் தொடர் இருமல் மற்றும் அதிக காய்ச்சல் இருந்தால், பிறருக்கு கொரோனாவை பரப்புவதை தடுக்கும் விதமாக வீட்டிலேயே இருக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

கோவிட் - 19 வைரஸின் அறிகுறிகளை தொடர்ந்து கண்காணிக்கும் செயலியில் மக்கள் இட்ட பதிவுகளில் 53% பேர் தங்களுக்கு உடல் சோர்வு இருப்பதாகவும், 29% பேர் தொடர் இருமல் இருப்பதாகவும், 28% சுவாசிப்பதில் சிரமம் இருப்பதாகவும், 18% பேரால் வாசனைகளை முகரவோ, உணவின் சுவையை அறியவோ முடியவில்லை என்றும், 10.5% பேர் காய்ச்சலால் அவதிப்படுவதாகவும் பதிவிட்டுள்ளார்கள்.

இந்த செயலியை பயன்படுத்திய நான்கு லட்சம் பேரில், 1,702 பேருக்கு கொரோனாவிற்கான பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. அதில், 579 பேருக்கு இந்த வைரஸ் இருப்பது உறுதியாகியுள்ளதோடு, 1,123 பேருக்கு வைரஸ் இல்லை என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

இதில், கொரோனா இருப்பது உறுதியாகியுள்ளவர்களில், 59% பேர், தங்களால் வாசனைகளை முகர முடியவில்லை என்றும், உணவின் சுவை தெரியவில்லை என்று கூறியுள்ளார்கள்.

அப்படியென்றால், உணவின் சுவையை அறிய முடியாத நிலையையும், வாசனையை முகர முடியாத நிலையையும், கவனிக்கப்பட வேண்டிய அறிகுறிகளாகச் சேர்க்க வேண்டுமா?

அவ்வாறு சேர்ப்பதற்குப் போதிய அளவில் ஆதாரங்கள் இன்னும் கிடைக்கவில்லை என்று நிபுணர்கள் கூறுகிறார்கள்.

பிரிட்டன் பொது சுகாதாரத்துறையும், உலக சுகாதார நிறுவனமும் இவற்றை இன்னும் பட்டியலில் சேர்க்கவில்லை.

பிரிட்டன் காது, மூக்கு, தொண்டை மருத்துவர்களுக்கான அமைப்பான ஈ.என்.டி யூ.கேவின் மருத்துவர்கள், கோரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட சிலர் இந்த அறிகுறிகள் இருப்பதாக கூறுவதில் ஆச்சரியம் இல்லை என்றும், ஆனால் இந்த அறிகுறிகள், கோவிட் - 19ற்கானவை மட்டுமல்ல என்றும் கூறுகிறார்கள்.

இவையும் கொரோனாவின் அறிகுறிகளாக இருக்கலாம் என்று அவர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள்.

இந்த அறிகுறிகள் கவனத்தில் கொள்ள வேண்டியவை என்றாலும், தனிப்பட்ட முறையில் இல்லாமல், கொரோனாவின் முக்கிய அறிகுறிகளான இருமல் மற்றும் காய்ச்சலுடன் சேர்ந்து வரும் போது இந்த அறிகுறிகள் கவனத்தில் கொள்ள வேண்டியவை என்கிறார்கள் கிங்ஸ் கல்லூரி ஆய்வாளர்கள்.

முதன்மை ஆய்வாளரான பேராசிரியர் டிம் ஸ்பெக்டர், மற்ற அறிகுறிகளுடன் சேர்க்கும் போது, சுவை மற்றும் வாசனை முகரும் திறனை இழப்பவர்கள், கோவிட் 19 வைரஸால் பாதிக்கப்பட மூன்று மடங்கு வாய்ப்புள்ளதாக தரவுகள் கூறுகின்றன. அப்படி நடந்தால், இந்த வைரஸ் பிறருக்கு பரவாமல் தடுக்க ஏழு நாள்கள் தனிமைப்பட்டு இருங்கள் என்கிறார்.



SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com



- க.சுபகுணம் -

# அமேசான் காட்டிற்குள் புகுந்த கொரோனா வைரஸ்...

## ஆபத்தில் பழங்குடிகள்!

பிரேஸில் எல்லைக்குள் வருகின்ற அமேசான் வனப்பகுதிக்குள் 107 பூர்வகுடியினக் குழுக்கள் இருக்கின்றன. அவர்கள் பெரும்பாலும், அருகருகே சின்னச்சின்ன குக்கிராமங்களில் பிரிந்தே வாழ்கிறார்கள்.

கடந்த ஏப்ரல் முதலாம் திகதியன்று, பிரேஸில் சுகாதாரத் துறை அமேசான் காட்டிற்குள் வாழ்கின்ற பூர்வகுடி மக்கள் மத்தியில் கொரோனா வைரஸ் பரவியிருப்பதை உறுதிசெய்துள்ளது. வடக்கு அமேசானிலுள்ள கொகாமா என்ற பூர்வகுடியைச் சேர்ந்த 20 வயது பெண்ணுக்கு கொரோனா பொஸிட்டிவ் வந்திருப்பதை பிரேஸில் நாட்டின் பூர்வகுடி மக்களுக்கான மருத்துவ சேவைக் குழு உறுதிப்படுத்தியுள்ளது.

சாவோ ஜோஸ் என்ற கிராமத்தில், சுகாதாரத் துறையின் ஏஜென்ட்டாகப் பணிபுரிகிறார் அந்தப் பெண். சோலிமோயெஸ் நதியின் மேல்நிலைப் பகுதி வரையிலான அவருடைய வழக்கமான பயணத்தை முடித்துவிட்டு வந்த பிறகே, அவருக்கு அதற்குரிய அறிகுறிகள் தெரிந்துள்ளன. தலை, தொண்டை மற்றும் நெஞ்சுப் பகுதிகளில் கடுமையான வலியோடு கூடிய காய்ச்சல் அவருக்கு இருக்கவே, பரிசோதித்த மருத்துவர்கள், அவருக்கு கொரோனா இருப்பதை உறுதிசெய்தனர். அவருடைய பதிவுகளின்படி, மார்ச் 18 ஆம் திகதி, உடன் பணிபுரிபவர் ஒருவரோடு நான் இருந்தேன். அவருக்கு கொரோனா இருப்பது தெரியவந்து தனிமைப்படுத்தப்பட்ட அடுத்த மூன்று நாள்களில், எனக்கு நுகர்தல் குறைபாடும் இருமலும் ஏற்பட்டன என்று கூறியுள்ளார்.

அமேசான் காட்டின் உள்பகுதியில் வாழும் பழங்குடிகள், மருத்துவ வசதிகளைப் பெறவே 24 மணிநேரம் படகுப் பயணம் செய்து வெளியே வர வேண்டும்.

மேத்யூஸ் ஃபெயிடோஸா என்ற மருத்துவருக்கு கொரோனா இருப்பது தெரியவந்த பிறகு, அவரோடு தொடர்பிலிருந்த 27 பேர் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டனர். அந்த 27 பேரில் கொகாமா இனத்தைச் சேர்ந்த இந்தப் பெண்ணும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஃபெயிடோஸா டிகுனா என்ற கிராமத்திலிருந்த 10 பூர்வகுடி மக்களுக்கு




அவர் சிகிச்சையளித்துள்ளார் என்று பழங்குடிகளுக்கான மருத்துவர் குழு தெரிவித்துள்ளது.

ஃபெயிடோஸா, தெற்கேயுள்ள சான்டா காடரினா மற்றும் பரானா என்ற மாகாணங்களுக்கு விடுமுறையில் சென்றுவிட்டு வந்தவுடனேயே தன் பணியைத் தொடங்கியிருந்தார். அவரிடம் கொரோனாவுக்கான எந்தவித அறிகுறியுமே தொடக்கத்தில் தெரியவில்லை. அவர் வந்து 7 நாள்கள் கழித்து அறிகுறிகள் தெரிய வரவே, பரிசோதித்துப் பார்க்கையில் கொரோனா இருப்பது உறுதியானது. விடுமுறையின்போதோ, திரும்பி வரும்போதோ செய்த படகுப் பயணத்தின் போதோதான் இந்தத் தொற்றுத் தனக்கு ஏற்பட்டிருக்க வேண்டுமென்று ஃபெயிடோஸா தெரிவித்துள்ளார்.

ஃபெயிடோஸா மூலம், இந்தச் சுற்றுவட்டாரக் கிராமங்களில் கொரோனா தொற்றுக்குப் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகமாகியிருக்கலாம் என்று அஞ்சுகிறார், ஆஸ்வால்டஓ க்ரூஸ் என்ற அமைப்பைச் சேர்ந்த ஆராய்ச்சியாளரும் மருத்துவருமான ஆன்ட்ரே மொரெய்ரா கார்டோசா. பொதுவாக, வெளியுலகோடு அதிகத் தொடர்பின்றி குறிப்பிட்ட வட்டத்திற்குள்ளேயே வாழும் பூர்வகுடி மக்களுக்கு அந்தப் பகுதியைத் தாண்டிய நோய்களுக்கு, தேவைப்படும் நோய் எதிர்ப்புச் சக்தி இருக்காது. அவர்களுடைய எதிர்ப்புத் திறன் குறைபாடு காரணமாக, இதுபோன்ற தொற்று நோய்களுக்கு எளிதாகப் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய உடல்நலம் மற்றும் பொருளாதார நிலை, இந்தப் பிரச்னையை மேலும் பெரிதாக்கிவிடும்.

பூர்வகுடியின மக்கள் மத்தியில் கொரோனா வைரஸ் பாதிப்பு முதன்முதலாகக் கண்டறியப்பட்டுள்ளதை அடுத்து, உடனடி நடவடிக்கைகளை பிரேஸில் அரசு எடுக்க வேண்டுமென்று மருத்துவர்கள் குழு நேற்றுக் கோரிக்கை வைத்துள்ளது. அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கும் அதேநேரம், பூர்வகுடி மக்கள் வாழும் அனைத்துக் கிராமங்களுக்கும் தேவையான உணவு, சுத்தம் செய்வதற்கான பொருள்கள் ஆகியவற்றைக் கொடுக்கவும் பிரேஸில் அரசு ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறது.

அமேசான் காட்டின் உள்பகுதிக்குள், இன்னும் தனிமைப்பட்டு வாழ்கின்ற பூர்வகுடிகள் மத்தியில் பரவிவிடும் ஆபத்து இருக்கிறது. பிரேஸில் எல்லைக்குள் வருகின்ற அமேசான் வனப்பகுதிக்குள் 107 பூர்வகுடியினக் குழுக்கள் இருக்கின்றன. அவர்கள் பெரும்பாலும், அருகருகே சின்னச் சின்ன குக்கிராமங்களில் பிரிந்தே வாழ்கிறார்கள். இது பரவினால், அவர்கள் அனைவரையும் எளிதில் பாதித்துவிடும் ஆபத்து இருக்கிறது. ஆகவே, இதை அவசரகால நடவடிக்கையாக முன்னெடுக்க, பிரேஸில் அரசாங்கத்தின் பூர்வகுடிப் பாதுகாப்பு அமைப்பு முயல்கிறது.



# ஒரே நிறம்,ஒரே இனம், ஒரே மதம், ஒரே உடல், ஒரே குடும்பம் என்ற ஒற்றுமை உணர்வைத் தந்துள்ளது இந்த மனிதப் பேரிடர் நெருக்கடி

## சுட்டிக்காட்டுகின்றார் அ. ஜீவேந்திரா போல் அ.ம.தி. அடிகளார்

2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி நியூயோர்க் நகரில் உள்ள உலக வர்த்தக மைய இரட்டைக் கோபுரங்கள் மீது விமான தாக்குதல் நடத்தப்பட்டு அவை இடிந்து விழுந்தன. இந்நிகழ்வை மையப்படுத்தி ஒன்று என்ற தலைப்பில் சோயர் என்பவர் எழுதியிருந்த ஒரு கவிதையின் வரிகள் இவை:

**கரும்புகையும் புழுதியும் சாம்பலும் மழை போல்**
**இறங்கி வந்த போது நாம் ஒரே நிறத்தவரானோம்.**
**எரியும் கட்டடத்தின் படிகளில் ஒருவர் ஒருவரைச்சுமந்து**
**இறங்கிய போது நாம் ஒரே இனத்தவரானோம்.**
**சக்தி வேண்டி முழந்தாள் படியிட்ட போது**
**நாம் ஒரே மதத்தவரானோம்.**
**இரத்ததானம் வழங்க வரிசையில் நின்ற போது**
**நாம் ஒரே உடலானோம்.**
**பெரும் அழிவை எண்ணி கூடி வந்து அழுத போது**
**நாம் ஒரே குடும்பமானோம்.**

ஒரு கொடூரமான நிகழ்வு நம்மை ஒருங்கிணைத்தது என்பது வேதனையான ஓர் உண்மை. இக் கவிதை வரிகள் கூறும் ஒரே நிறம், ஒரே இனம், ஒரே மதம், ஒரே உடல், ஒரே குடும்பம் என்பது தானே நாம் அனைவரும் காணும் கனவு ஆகும். அன்றாடம் நாம் எழுப்பும் பிரிவுச் சுவர்களுக்குப் பின் இந்தக் கனவு காணாமல் போய்விடுகிறது.

இந்நாள்களில் உருவெடுத்திருக்கும் கோவிட் – 19 என்னும் கொரோனா வைரஸினது தாக்கம் உலகையே அதிரவைத்து மனித குலத்தை பெரும் வேதனைக் குட்படுத்தியுள்ளது. எனது நிறம், எனது இனம், எனது மதம்,எனது குடும்பம் என்ற குறுகிய வட்டத்திற்குள் பகைமையையும் தந்திரங்களையும் வன்முறைகளையும் சமகாலங்களில் தூண்டி விட்டு மனித இனம் சின்னாபின்னமாக்கப்பட்ட நிலையில் கொரோனா வைரசின் தாக்கம் பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தல் போலாயிற்று.

பொதுவாக ஒரு நாட்டிலேயோ அல்லது ஊரிலேயோ நில நடுக்கம், பெரு வெள்ளம், சூறாவளி, வறட்சி போன்ற இயற்கையின் அழிவு என்ற செய்தியை அல்லது வன்



முறை யுத்தம் என்ற மனிதர்கள் ஏற்படுத்தும் அழிவை அறிந்துகொள்ளும் பொழுது அந்தச் செய்தி உலகளாவிய ரீதியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை. மாறாக ஓரிரு நாள்களே அதன் ஆயுள் காலமாகிவிடுகிறது. அவற்றின் தாக்கத்திற்கு மனித ஆற்றல்களும் சமூகப் பொருளாதார கட்டமைப்புகளும் ஈடு கொடுக்கக் கூடியவையாக இருக்கின்றன.

ஆனால் 200 இற்கும் மேற்பட்ட நாடுகளையும் உலகின் எல்லாக் கண்டங்களையும் தொட்டுவிட்ட தொற்றுக் கிருமி முழு உலகையும் பலவீனப்படுத்தி உசுப்பிவிட்டது. ஒரு புறம் இவ் உலகளாவிய பரவல் மனித வரலாற்றின் ஒரு துன்பியலாகும். மறுபுறம் இத் தொற்று நோயின் தாக்கத்தின் மத்தியில் உலகமே விழித்துக் கொண்டது. அதன் விளைவாக நாம் ஒரு சமூகம் என்ற விழிப்புணர்வும் எம் மத்தியில் அக்கறையும் கரிசனையும் பரவலாக தோன்றியுள்ளது.

நிறம்,இனம்,மதம் என்னும் எல்லைகளைத் தாண்டி வீறுகொண்டு எழும் உலகளாவிய பரவல் நோயான கொரோனா வைரஸ் அதன் தாக்கம் மனித மனங்களை இளகப்பண்ணிவிட்டது. நான், எனது என்ற எல்லைகளைத் தாண்டி அடுத்திருப்பவர்களோடு ஒத்துணர்வு கொள்ள மனித மனங்களைத் தூண்டிவிட்டது. ஒருவர் அடுத்திருப்பவர் மீதும் ஒரு சமூகம் இன்னொரு சமூகத்தின் மீதும் ஒரு நாடு இன்னொரு நாட்டின் மீதும் ஒத்துணர்வு கொண்டு அவர்களுக்குத் துணை செய்யப் புறப்படும்போது பகைமையும் பழியும் வன்முறையும் தாமாகவே செயலிழந்து மடிந்து போகின்றன. பல ஆண்டு காலமாக பகை கொண்ட நாடுகள் மருத்துவ தொழில்நுட்ப உதவிகளை வழங்க முன்வருவதும் அடுத்தவர் துயர் துடைக்க ஆதரவு வழங்குவதும் உலகளாவிய சமூகம் ஒன்று என்ற இலக்கை நோக்கி பயணிக்கத் தொடங்கிவிட்டது என்ற உண்மையை வெளிப்படுத்துகின்றது.

காலைக்கதிர் Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி – யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
- ஊடக விரிவுரையாளர்

## புனித மார்ச்சல்லோ திருத்தலத்திற்கு யாத்திரை சென்று திருத்தந்தை செபம்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தவக்காலத்தின் 3ஆம் ஞாயிறு அன்று உரோமாபுரியில் 500 ஆண்டுகள் பழைமையானதும் புதுமையுமுள்ள சிலுவை நிறுவப் பட்டுள்ள புனித மார்ச்சல்லோ திருத்தலத்திற்கு யாத்திரை சென்று செபித்தார். 1522ஆம் ஆண்டு பெரும் கொள்ளை நோயிலிருந்து மக்கள் மீண்டது இச் சிலுவையில் தொங்கும் இயேசு பிரானின் புதுமை என்பது ஒரு வரலாற்று உண்மையாகும்.

கொரோனா வைரஸ் என்னும் உலகாளாவிய தொற்று நோய் மனித சமூகம் சந்தித்த பெரும் துன்பம். தியாக வாழ்வின் ஊடாகத்தான் இத்துன்பத்திலிருந்து உலகை மீட்க முடியும் என்பது சிலுவையில் தொங்கும் இறைமகன் இயேசு நமக்கு அளிக்கும் செய்தியாகும்.

நிறம், இனம், மதம், எனது குடும்பம் மட்டும் என்ற வரையறைகளைக் கடந்து யாவரும் ஒன்றே என்ற இலட்சியத்தோடு உழைப்பவர்களும் தியாகிகளே.

## அரைக்கம்பத்தில் பறக்கிறது வத்திக்கான் நாட்டுக்கொடி



### கொரோனாத் தாக்கத் துயரத்தால்

இத்தாலியிலும் உலகெங்கும் கொரோனா தொற்றுக் கிருமியின் தாக்கத்தால் இறந்தோர்,அவர்களின் குடும்பத்தினர், இந்த நோயை முடிவுக்குக் கொணர போராடி வருவோர் ஆகிய அனைவருக்கும் மரியாதை செலுத்தும் வண்ணம் 31 மார்ச் 2020 முதல் வத்திக்கான் நாட்டின் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளது.

## உலகளாவிய போர் நிறுத்தத்திற்கு கொரோனா பரவலினால் இசைவு

உலகம் கொரோனா தொற்றுக் கிருமியின் தாக்குதலை எதிர்கொண்டுள்ள வேளை ஐ.நா. பொதுச்செயலர் உலகளாவிய போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தார். திருத்தந்தை பிரான்ஸிஸ் அவர்கள் ஐ.நா. பொதுச்செயலருடன் தானும் இணைந்து உலகளாவிய போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுப்பதாக 29 மார்ச் 2020 அன்று தெரிவித்தார். இந்த அழைப்பிற்கு பல்வேறு ஆயுதம் ஏந்திய குழுக்கள் இசைந்துள்ளன.

காமரூன், பிலிப்பீன்ஸ், ஏமன், சிரியா போன்ற நாடுகளிலுள்ள பல்வேறு புரட்சிக் குழுக்கள் வன்முறையைக் குறைப்பதற்கு முதல் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன

## கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கியுடெக் கரித்தாஸ் நிறுவனத்தினர் உதவி

*யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தின் கியுடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் இயக்குநர் எஸ்.இயுஜீன் பிரான்ஸிஸ் அடிகளரர் யாழ்ப்பாணம் அரச அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க பால்மா பவுடர் பக்கெற்றுக்களை பருத்தித்துறை, தெல்லிப்பளை,கோப்பாய், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளுக்குடபட்ட சிறுவர்களுக்கு வழங்கினார்.*



காலைக்கதிர்
Kalaikathir



# கொரோனாவின் பிறப்பிடமான சீனா பற்றிய சில அதிர்ச்சிகரமான உண்மைகள்...

இன்று உலகம் முழுவதும் இருக்கும் அனைத்து நாடுகளின் வெறுப்பைச் சம்பாதித்து இருக்கும் ஒரு நாடு என்றால் சீனாதான். சீனாவின் வுஹான் மாகாணத்தில் உருவான கொரோனா வைரஸ் இன்று உலகத்தையே அச்சுறுத்தும் ஒரு வைரஸாக மாறிவிட்டது. உலக பொருளாதாரம் தொடங்கி மக்களின் வாழ்க்கை வரை அனைத்தும் இந்த வைரஸால் முடங்கிவிட்டன. தெரிந்தோ, தெரியாமலோ இந்த பேரழிவிற்கு சீனா ஆரம்ப புள்ளியாக மாறிவிட்டது.



கொரோனா மட்டுமின்றி இதற்கு முன்னாலும் பல வைரஸ்களின் பிறப்பிடமாக சீனா இருந்துள்ளது. சீனாவை பொறுத்தவரை அது உலக மக்கள்தொகையில் முதலிடத்தில் இருக்கும் நாடு, பொருளாதாரரீதியாக வேகமாக வளர்ந்து வரும் நாடு, அனைத்து பொருள்களுக்கும் நகல் தயாரிக்கும் நாடு என்பது மட்டும்தான் நாம் அறிந்தது. ஆனால் சீனா பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டிய பல முக்கிய தகவல்கள் உள்ளன. அவை என்னவென்று இந்த பதிவில் பார்க்கலாம்.

### சீனா அதன் பெயரை எவ்வாறு பெற்றது?

உலகின் மிகப் பழமையான நாகரிகங்களில் ஒன்றான சீனா கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் அதன் பெயரைப் பெற்றது. 221 ஆம் ஆண்டு சின் என்னும் சிறிய மாநிலத்தின் ஆட்சியாளராக இருந்த செங் ஆறு போட்டி இராஜ்ஜியங்களை இணைத்து சின் ஷிஹ் ஹூவாங் டி என்ற பட்டத்தை எடுத்துக் கொண்டார். இதற்கு அர்த்தம் சின்னின் முதல் ஆகஸ்ட் அரசர் என்பதாகும். 1957 இல் ஆங்கிலமயமாக்கப்பட்ட சீன எழுத்துக்களை மாற்றும் முறையான பின்யான் அறிமுகப்படுத்தப்பட்டது. இது சீன எழுத்துக்களை ரோமானிய எழுத்துக்களாக மொழி பெயர்க்க உருவாக்கப்பட்ட ஒரு புதிய அமைப்பு. பின்யானில் செங் கெங் ஆனார், சின் கின் ஆனது மற்றும் அவரின் பட்டம் கின் ஷி ஹூவாங்டி என்று மாறியது. பின்யானில் சீனாவின் பெயர் ஜாங் குவோ ஆகும்.

வரலாற்று கல்லறை

210 ஆம் ஆண்டு இறந்த சீனாவின் முதல் அரசர் கின் ஷி ஹூவாங்கி தான் இறந்த பிறகு ஓய்வெடுக்கப் போகும் இடத்தில் யாரும் தன்னை தொந்தரவு செய்யக்கூடாது என்று விரும்பினார். எனவே அவர் வடமேற்கு சீனாவில் மவுண்ட் லி என்ற தனது பெரிய கல்லறை அமையப்போகும் இடத்தில் பல பொறிகளை அமைத்தார். வரலாற்றாசிரியர் சிமா கியான் கூற்றுப்படி, சக்கரவர்த்தி தனது கல்லறைக்கு செல்லும் வழிகளில் பல ஆபத்தான பொறிகளை அமைத்தார். அங்கு பாதுகாக்க வேண்டியவை அதிகம் இருந்தது. சிமா கியான் கூற்றுப்படி ஏழு இலட்சத்துக்கும் அதிகமானோர் அவரின் கல்லறையைக் கட்டும் பணியில் கட்டாயமாக ஈடுபடுத்தப்பட்டனர். அவரின் கல்லறையை கட்டி முடிக்க





36 ஆண்டுகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

### கல்லறையின் சிறப்புகள்



சக்கரவர்த்தியுடன் பல விலை மதிப்பற்ற பொக்கிஷங்கள் புதைக்கப்பட்டன. அந்தச் செல்வங்களை கல்லறைக்குள் நகர்த்த உதவிய சிறப்புத் தொழிலாளர்கள் உயிருடன் புதைக்கப்பட்டனர். 1974 ஆம் ஆண்டில், ஆச்சரியப்பட்ட விவசாயிகள் குழு மவுண்ட் லி அருகே கிணற்றை கண்டறிந்தது, மேலும் பல டெரகோட்டா வீரர்களைக் கண்டுபிடித்தது. இவை பின்னர் 7000 க்கும் மேற்பட்ட களிமண் உருவங்களைக் கொண்ட புதைக்கப்பட்ட இராணுவத்தின் ஒரு பகுதியாக நிரூபிக்கப்பட்டன. போர் உருவாக்கத்தில் நின்று, ரதங்கள் மற்றும் குதிரைகளின் உண்மையான அளவிலான மாதிரிகள் நிறைந்த, களிமண் ஆண்கள் தங்கள் வெவ்வேறு அணிகளைக் குறிக்கும் கவசங்களை அணிந்து, உண்மையான ஆயுதங்களை ஏந்தியிருந்தனர். நம்பமுடியாதபடி, 2000 ஆண்டுகளுக்குப் பிறகும், ஒரு வாள் ஒரு முடியைப் பிரிக்கும் அள வுக்கு கூர்மையாக இருந்தது.

### முதல் வரலாற்று புத்தகம்

சீனாவின் பழமையான விரிவான எழுதப்பட்ட வரலாறு கிமு 90 இல் இருந்து வந்தது. ஷி ஜி (வரலாற்று பதிவுகள்) என்று அழைக்கப்படும் இது நீதிமன்ற ஜோதிடரும் கிராண்ட் ஸ்க்ரைபுமான சிமா கியான் அவர்களால் தொகுக்கப்பட்டது, அவருடைய தந்தை இந்த வேலையைத் தொடங்கியிருக்கலாம் என்று கருதப்படுகிறது. கிமு 1500 முதல் 90 வரை சீன பதிவுகளின்படி ஷி ஜி மனிதனின் வரலாற்றைக் குறிக்கிறது. 130 அத்தியாயங்கள் கொண்ட இந்த புத்தகம் 26 நிலையான வரலாறுகளின் மாதிரியாக மாறியது, இது 1912 ஆம் ஆண்டு வரை இடைவிடாமல் தொடர்ந்தது.

### மரணத்தை பரிசளித்த பேரரசர்

பண்டைய சீனாவில் தோல்வியின் விலை மிகப்பெரியதாக இருந்தது. டாங் வம்ச பேரரசரின் இளம் மகள், யிசோங் (கி.பி 860 முதல் 874 வரை ஆட்சி செய்தவர்) காய்ச்சலால் பாதிக்கப்பட்டபோது, சீனாவின் 20 முன்னணி மருத்துவர்கள் அவருக்கு சிகிச்சை அளிக்க ஏகாதிபத்திய தலைநகரான சாங்கனுக்கு வரவழைக்கப்பட்டனர். ஒவ்வொரு மருத்துவரும் ஒரு தீர்வை பரிந்துரைத்தனர், ஆனால் எதுவும் வெற்றிபெறவில்லை, இறுதியில் இளவரசி இறந்தார். துக்கத்தாலும், விரக்தியும் பாதிக்கப்பட்ட பேரரசர் துரதிர்ஷ்டமான அந்த மருத்துவர்களை தலையை துண்டித்துக் கொன்றார்.

> கொரோனா மட்டுமின்றி இதற்கு முன்னாலும் பல வைரஸ்களின் பிறப்பிடமாக சீனா இருந்துள்ளது. சீனாவை பொறுத்தவரை அது உலக மக்கள்தொகையில் முதலிடத்தில் இருக்கும் நாடு, பொருளாதாரரீதியாக வேகமாக வளர்ந்து வரும் நாடு, அனைத்து பொருள்களுக்கும் நகல் தயாரிக்கும் நாடு என்பது மட்டும்தான் நாம் அறிந்தது. ஆனால் சீனா பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டிய பல முக்கிய தகவல்கள் உள்ளன.

### சீனாவில் இருந்து ரோம் வரை

பண்டைய சீனா ஏகாதிபத்திய ரோமுடன் வர்த்தகம் செய்தது, ஆனால் சீனர்களும் ரோமானியர்களும் சந்தித்ததில்லை. இரண்டு நாகரிகங்களுக்கிடையேயான ஒரே இணைப்பு, சில்க் சாலை, இது இமயமலையின் வடக்கு விளிம்பில் சீனாவிலிருந்து கிழக்கு மத்தியதரைக் கடல் கடற்கரை வரை ஓடியது, தெற்கே இந்தியாவுக்குச் செல்லும் ஒரு கிளைச் சாலை இருந்தது. 2ஆம் நூற்றாண்டில் ஒட்டக வணிகர்கள் இந்த சாலையில் பயணிக்க தொடங்கினர், அதற்குப்பின் சீனர்கள் 11, 200 கிமீ தூரமிருந்த இந்த சாலையில் தொடர்ச்சியாக பயணிக்கத் தொடங்கினர். எவ்வாறாயினும், சீனர்களே தங்கள் சொந்த எல்லைகளைத் தாண்டி செல்ல துணியவில்லை. அதற்கு பதிலாக அவர்கள் ஆப்கானிஸ்தான் எல்லைக்கு அருகிலுள்ள ஒரு இடத்தில் தங்கள் வர்த்தகப் பொருள்களை பெர்சியா அல்லது மத்திய ஆசியாவிலிருந்து வரும் மற்ற வர்த்தகர்களுக்கு மாற்றினர், பெரும்பாலும் இந்த வணிகர்கள் பட்டு வழியை மேற்கு முனைக்கு அருகிலுள்ள சிரியர்களுக்கும் கிரேக்கர்களுக்கும் விற்றனர், அங்கிருந்து பட்டு ரோம் நகருக்கு அனுப்பப்பட்டது. இந்த வர்த்தகர்கள் இந்த சாலையின் மேற்கு முனையில் இருந்த சிரியர்களுக்கும், கிரேக்கர்களுக்கும் இந்த பொருள்களை விற்றனர்.

(13 பக்கம் பார்க்க)


படம் 1


படம் 2


படம் 3

# தினம் ஒரு தலைப்பு

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்

## சித்திரப்போட்டி

நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் 'அரண்மனை' எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர். தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிக மாக தெரிவுசெய்யப்பட்ட சித்திரங்களை வரைந்தவர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.



**படம் 1**
வரைந்தவர்
பா. ஆத்மிகா – தரம் 3
சென்பிரன்றன்ஆரம்பப்பாடசாலை
அவுஸ்திரேலியா

**படம் 2**
வரைந்தவர்
தி. கோவெழிலன் – தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

**படம் 3**
மயூரன் தேனுகா – தரம் 10
யா/ வேலணை மத்திய கல்லூரி

இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.
இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு – 'மாட்டு வண்டி'

**வ. கார்ணிகா - தரம் 2**
யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி

**பா. பிரியேஷ் - தரம் 1**
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

**பா. ஹரிஷ் - தரம் 4**
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

**அ. க. ரிஷாளன் - தரம் 11**
யா/ பரியோவான் கல்லூரி

**கு. ஆதிகேசவன் - தரம் 10**
யா/ ஹாட்லிக் கல்லூரி




**கே. தர்சன் - தரம் 6**
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

**கே. திகேசன் - தரம் 10**
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

**எஸ். அக்ஷன்யா - தரம் 4**
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

**எஸ். ஹரினி - தரம் 2**
யா/ புனித டொன் பொஸ்கோ வித்தியாலயம்

**சுந்தரலிங்கம் பிரவீன் - தரம் 10**
யா/ மீசாலை வீரசிங்கம் வித்தியாலயம்

**வசந்தரூபன் அபிசன் - தரம் 3**
சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை

**லோ. நித்திலா - தரம் 4**
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

**லோ. சிவயானு - தரம் 7**
யாழ். இந்து மகளிர் கல்லூரி

**பா. தனுபன் - தரம் 6**
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

**ந. தளிரினி - தரம் 8**
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி

**இ. பவிசன் - தரம் 2**
யா/ வதிரி வடக்கு மெதடிஸ்தமிழ் தமிழ் கலவன் பாடசாலை

**அரவிந்தன் அபர்நாத் - தரம் 10**
யாழ்ப்பாணம்இந்துக்கல்லூரி

**இ. சிந்தூரிக்கா - தரம் 2**
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

**த. ஆரூஜன் - தரம் 2**
யா/ வதிரி வடக்கு மெ. மி. த. க. பாடசாலை

**அ. அர்யன் - தரம் 3**
கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை

**லோகேஸ்வரன் கோபிகா - தரம் 12**
யா/சுண்டுகுளிமகளிர்கல்லூரி

**சி. சிவகலை - தரம் 4**
யா/இடைக்குறிச்சிசிறிசுப்பிரமணிய வித்தியாலயம்

**செந்தூரன் அபிஷ்கன் - தரம் 4**
யா/ மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி

**த. சம்யுக்தா - தரம் 3**
யா/சுண்டுகுளிமகளிர்கல்லூரி

**த. சுதந்திரா - தரம் 6**
யா/சுண்டுகுளிமகளிர்கல்லூரி

**பி. தர்னிகன் - தரம் 9**
யாழ்ப்பாணம்இந்துக்கல்லூரி

# நுண்கிருமிகளின் கூடாரங்களாக வெளவால்கள் இருப்பது எப்படி?



வெளவால்களே சீனாவிலிருந்து பரவிய கொரோனா வைரஸின்தோற்றுவாயாக இருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. பல்வேறு நோய்களுக் குக் காரணமான நுண்கிருமிகளுடன் வாழ்வதற்கான நோய் எதிர்ப்பு சக்தி வெளவால்களுக்கு இருக்கிறது என்பது தான் அதற்கான காரணம். ‘இகாஹெல்த் அலையன்ஸ்’ அமைப்பின் தலைவரான பீட்டர் டஸக், விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்குப் பரவும் நோய்களைப் பற்றி சீனாவிலிருந்து 15 ஆண்டுகளுக்கும் மேலாக ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

‘கொரோனாவுக்கு மூலக் காரணம் என்னவென்று இதுவரை எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால், அது வெளவால்களிடமிருந்து தோன்றிய கொரோனா வைரஸ் என்பதற்கு வலுவான ஆதாரங்கள் இருக்கின்றன’ என்று கூறியிருக்கிறார்.

ஒரு வெளவால் தனக்கு எந்தப் பாதிப்பும் இல்லாமலேயே பெரும்பாலான வைரஸ்களுக்கு உறைவிடமாக இருக்க முடியும். ஆப்பிரிக்கா, மலேசியா, வங்கதேசம், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் பரவிய ‘மார்பர்க்’, ‘நிபா’, ‘ஹேந்த்ரா’, ‘ரேபிஸ்’ வைரஸ்களுக்கு வெளவால்கள்தான் இயற்கை உறைவிடம்.

‘எபோலா’ வைரஸ்களையும் கூட வெளவால்கள் தங்களோடு வாழ அனுமதிக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. வெளவால்கள் மற்ற எந்தப் பாலூட்டிகளைவிடவும் வைரஸ்களால் பாதிக்கப்படாத தன்மையையும் அதிகமாகவே கொண்டிருக்கின்றன.

இது தொடர்பாக மருத்துவ அறிவியல் தொடர்ந்து ஆராய்ச்சிகளைச் செய்துகொண்டு தான் இருக்கிறது.

புதிதாக வெளிவந்திருக்கும் ஆய்வு முடிவொன்று, வெளவால்கள் பறப்பதற்கான பரிணாம வளர்ச்சிப் படிநிலைகளானது அவற்றின் நோய் எதிர்ப்பு சக்தியிலும் மாற்றங்களை உருவாக்கியிருக்கின்றன என்று கூறுகிறது.

தற்போது உலகம் முழுவதும் பரவிவரும் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கு, அதன் தோற்றத்தைக் கண்டுபிடிப்பதும், மேலும் அது பரவாமல் தடுப்பதும் அவசியம். அதற்கு வெளவால்களைக் கண்காணிப்பதும் ஒரு பகுதி என்கிறார் பீட்டர் டஸக்.

சீனாவில் உள்ள அறிவியலாளர்கள் ஏற்கெனவே வெளவால்களை மிகவும் தீவிரமாகக் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். தற்போது ஏற்பட்டிருக்கும் கொரோனா வைரஸ் தாக்குதலைப் போல மீண்டும் ஒன்று ஏற்படக்கூடும் என்று அவர்களுக்குத் தெரியும். சீன ஆராய்ச்சியாளர்கள் கடந்த ஆண்டு வெளியிட்ட ஆய்வுக் கட்டுரையொன்றில், வெளவால்கள் வழியாகப் பரவக்கூடிய கொரோனா வைரஸ் மீண்டும் நோய்த் தாக்குதலை ஏற்படுத்தும், சீனா அதன் முக்கியக் குவிமையமாக இருக்கும் என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

கொறித்துண்ணும் விலங்குகள், குரங்குகள், பறவைகள் ஆகியவையும் கூட நோய்களைச் சுமந்து வந்து மனிதர்களிடத்தில் பரப்புகின்றன. ஆனால், வெளவால்கள் மனிதர்களோடு மிகவும் நெருக்கமாக வாழ்பவை. மிக அதிக ஆண்டுகள்ஆயுட்காலம்கொண்டவையும் கூட. சில வெளவால் இனங்கள், 40 ஆண்டுகள் வரையிலும் கூட வாழ்கின்றன. அண்டார்க்டிகா தவிர்த்துஅனைத்துகண்டங்களிலும் வெளவால்கள் இருக்கின்றன. மிகப் பெரியபரப்பளவில்அவை பறக்க முடியும் என்பதால் நோய் பரவும் வேகமும் அதிகமாக இருக்கிறது. எனவே,வெளவால்களின் வாழ்விடங்களை ஆக்கிரமிக்கும்போது அவை குடியிருப்புக்குள் வருகின்றன; எனவே, வன அழிப்பைத் தவிர்க்க வேண்டும் என்பதே ஆய்வாளர்களின் அறிவுரை.



“ஒரு வெளவால் தனக்கு எந்தப் பாதிப்பும் இல்லாமலேயே பெரும்பாலான வைரஸ்களுக்கு உறைவிடமாக இருக்க முடியும். ஆப்பிரிக்கா, மலேசியா, வங்கதேசம், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் பரவிய ‘மார்பர்க்’, ‘நிபா’, ‘ஹேந்த்ரா’, ‘ரேபிஸ்’ வைரஸ்களுக்கு வெளவால்கள்தான் இயற்கை உறைவிடம்.”

# கொரோனாவின் பிறப்பிடமான ...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)



### தலைசிறந்த மருத்துவம்

ஆஸ்துமாவிற்கு ஹார்செட்டில் ஆலையிலிருந்து பெறப்பட்ட எபெட்ரின் என்ற மருந்து கொண்டு சிகிச்சை அளிக்கலாம் என்று 1920 ல் இருந்து மேற்கில் கண்டறியப்பட்டது. ஆனால் சீன மருத்துவர்கள் கிட்டத்தட்ட 1700 ஆண்டுகளுக்கு முன்பு இந்த மருந்தைப் பயன்படுத்தினர். கி.பி 2 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஜாங் ஜாங்ஜியாங் என்ற மருத்துவரால் அதன் பயன்பாடு பரிந்துரைக்கப்பட்டது. கி.பி 152 முதல் 219 வரை வாழ்ந்த ஜாங், அப்போது சீனாவில் கிடைத்த அனைத்து மருத்துவ அறிவையும் ஒரு பெரிய தொகுப்பாக எழுதினார். கூடுதலாக, ஒரு நோயாளியின் நோயைக் கண்டறிய மருத்துவர்கள் பயன்படுத்தக்கூடிய நுட்பங்களின் விரிவான பட்டியலையும் அவர் தொகுத்தார்.

### ஜேட் இளவரசி

2160 துண்டுகள் கொண்ட ஜேட், தங்க கம்பி மூலம் கட்டப்பட்ட ஒரு அங்கியை ஹான் இளவரசி டூ வானின் உடலை எப்போதும் பாதுகாக்கும் நோக்கம் கொண்டு செய்யப்பட்டது. இளவரசி ஹான் வம்ச பேரரசர் ஜிங்டியின் மகன் லியு ஷெங்கின் முதன்மை மனைவி. கிமு 113 இல் அவர் இறந்த நேரத்தில் ஜேட் அதன் கடினத்தன்மை காரணமாக ஒரு தவறான பாதுகாப்பு என்று நம்பப்பட்டது. கிமு 113 இல் இறந்த இளவரசன், தனது மனைவியை விட கடினமான ஒரு அங்கியை வைத்திருந்தார். அதில் மிகவும் மதிப்புமிக்க கல்லின் 2690 மெருகூட்டப்பட்ட வட்டுகள் இருந்தன. 1968 ஆம் ஆண்டில் தலைநகர் பெய்ஜிங்கிலிருந்து தென்மேற்கே 110 கிமீ தொலைவில் உள்ள மான்செங்கில் ஜேட் அங்கிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

### தேர்வுகள் மற்றும் வேலைகள்

கிமு 2 ஆம் நூற்றாண்டு வரை சீன சிவில் சேவையாளரைத் தேர்ந்தெடுப்பதற்கு எழுத்துத் தேர்வுகள்பயன்படுத்தப்பட்டன உலகில்வேறெங்கும் அரசாங்க வேலைகள் பெரும்பாலும் ஆட்சியில் இருந்தவர்களின் உறவினர்களால் நிரப்பப்பட்டி



ருந்தன. டாங் வம்சத்தின் (கி.பி. 618  906) காலப் பகுதியில், தகுதியின் அடிப்படையில் பொது அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கும் இந்த கொள்கை அனைவருக்கும் திறந்திருக்கும் மையப்படுத்தப்பட்ட பொதுத் தேர்வுகளின் அமைப்பாக வளர்ந்தது. 1583 இல் சீனாவை அடைந்த ஒரு ஜேசுட் மினரி, மேட்டியோ ரிச்சி, இந்த அமைப்பு எவ்வாறு செயல்படுகிறது என்பதை விவரித்தார். தேர்வுகள் பல நாள்கள் நீடித்தன, மேலும் தேர்வாளர்கள் தங்கள் பதில்களை எழுத நாள் முழுவதும் அனுமதிக்கப்பட்டனர். தேர்வாளர்களின் அடையாளத்தை பாதுகாப்பதில் சீனர்கள் பல எச்சரிக்கையாக இருந்தனர். தேர்வு எழுதுபவர்களின் அடையாளங்களை மறைக்க அவர்கள் எழுதி முடித்தவுடன் அவர்களின் பதில் அனைத்தும் இன்னொருவரால் வேறு கையெழுத்தில் வேறொரு பேப்பரில் எழுதப்பட்டது.



# காதலர்கள் சந்திப்புக்கு வேட்டு வைத்த கொரோனா

**காதலர்களை, நாடு முழுவதும் கடந்த 10 நாட்களுக்கும் மேலாக கொரோனா படாதபாடு படுத்தி வருகிறது. குறிப்பாக பள்ளி, கல்லூரி, பணியிட காதலர்களுக்கு. கூடவே கள்ளக் காதலர்களுக்கும் தான்.**

“அடுத்த வினாடியே, இந்த உலகில் இருந்து கொரோனா வைரஸ் உன்னால் ஒழிந்து போகட்டும்!”

- இப்படியொரு வரத்தை கடவுள் தனது பக்தர்கள் அனைவருக்கும் அளித்தார் என்றால், அதை சற்றும் யோசிக்காமல் உடனே பயன்படுத்துபவர்கள் யாராக இருக்கும்?

நிச்சயமாக, காதலர்களைத் தவிர வேறு யாரும் இருக்க முடியாது. மற்றவர்கள் எல்லாம் இவர்களுக்கு பின்னால்தான்.

ஆம். இந்த காதலர்களை, நாடு முழுவதும் கடந்த 10 நாள்களுக்கும் மேலாக கொரோனா படாத பாடு படுத்தி வருகிறது. குறிப்பாக பள்ளி, கல்லூரி, பணியிட காதலர்களுக்கு. கூடவே கள்ளக் காதலர்களுக்கும்தான்.

கடற்கரை, பூங்கா, சினிமா தியேட்டர், ரயில் நிலையம், பஸ் நிறுத்துமிடம், பொழுதுபோக்கு மையங்கள், உணவகங்கள், கடை வீதி, வணிக வளாகங்கள், ஆள் நடமாட்டம் இல்லாத ஒதுக்குப்புறங்கள் என ஓர் இடம் பாக்கி விடாமல் அன்றாடம் எங்காவது ஓரிடத்தில் சந்தித்து மணிக்கணக்கில் கன்னா பின்னாவெனக் கதை பேசி, காதல் பயிரை உரம் போட்டு செழிக்க வளர்த்து வந்தவர்கள் மத்தியில் இந்த புதிய கொரோனா வைரஸ் திடீர் வில்லனாக வந்து அணுகுண்டை அல்லவா, வீசிவிட்டது?

அரசின் ஊரடங்கு உத்தரவால் வீட்டை விட்டு வெளியேற முடியவில்லை. எல்லாமே முடங்கிப் போச்சு!

‘வண்டியை எடுத்துட்டு போய் உடன் படிப்பவரை நேரில் பார்த்து பாட சந்தேகங்களை கேட்டு வருகிறேன்’ என கதை விடவும் முடியவில்லை. பகல் நேரத்தில் செல்போனில் கடலை போடுவதும் வீட்டில் பெற்றோர் கண்காணிப்பால் பாழாய் போய் விட்டது.

(இந்தியாவில் 80 சதவீத வீடுகளில் 2 அறைக்கும் மேல் இல்லை என்கிற புள்ளி விவரமும் கொரோனா தாக்குதல் நேரத்தில் இந்த காதல் வளர்ப்புக்கு ஆப்பு வைப்பதாக உள்ளது.)

சரி, இரவில் எல்லோரும் உறங்கிய பிறகு பேசலாம் என்று செல்போனை நைசாக எடுத்து ‘டச்’ செய்தால் கொரோனா விழிப்புணர்வு பற்றி ஒரு பெண்ணின் அறிவுரை ஒரு நிமிடம் ஆங்கிலத்திலும், தமிழிலும் ஒலித்து ‘மூடை’ மாற்றுகிறது.

### காதலர்கள்

வீடியோ கோலில் பேசலாம் என்றால், அந்தக் காலத்து ‘டிரங்க் கால்’ மாதிரி கத்திப் பேசி வீட்டில் காதல் ரகசியத்தை போட்டு உடைத்த மாதிரி ஆகிவிடுமோ? என்ற பயம் வேறு வருகிறது.

ஏகப்பட்ட பொய் மூடைகளை அவிழ்த்து விட்டு எல்லோரையும் முட்டாளாக்கி, துணிந்து ‘டூ வீலரை’ ஓட்டிக்கொண்டு சாலைக்கு வந்தால் பொலிஸ்காரர் லத்தியை சுழற்றி எதுக்கு வந்தே?... என மிரட்டி மீண்டும் வீட்டுக்கே விரட்டுகிறார்.

காதலிக்க வந்தேன் என்று அவரிடம் உண்மையை சொன்னால் சும்மா விடுவாரா? இன்னும் ரெண்டு சேர்த்து போடுவார்.

இதையெல்லாம் தாண்டி, ‘நம்ம ஆள்’ வீட்டு பக்கம் போய் ஜன்னல் வழியாக பார்க்கலாம் என்றால் வீட்டையே மறைத்து வேப்பிலை தோரணம். கொரோனா வைரஸ் வீட்டிற்குள் நுழைந்து விடக் கூடாதாம்.

காதலின் சுகம் காத்திருத்தல் என்பார்கள். 10 - 15 நிமிடம் காத்திருக்கலாம். ஒரு மணி நேரம் வரை கூட பொறுத்திருக்கலாம், ருசிக்கும்.

ஆனால், இந்த கொரோனா வைரஸ் ஒழிந்தால்



ஒரே வினாடியில் எல்லாம் சரியாகிவிடும் என்பது தான் காதலர்களின் ஒருமித்த சிந்தனை என்பது 100 சதவீத உண்மை.

இந்தப் பெரும் ஏக்கம், ஆதங்கம் ‘வீட்டை விட்டு வெளியே வராதீங்க’ என்று கொரோனாவுக்காக உத்தரவு போட்டுள்ள எல்லா நாடுகளின் காதலர்களிடமும் இருக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

இப்பச் சொல்லுங்க, கடவுள் அளிக்கும் கொரோனா ஒழிப்பு வரத்தை யார் முதலில் பயன்படுத்துவார்கள் என்று...?

## கொரோனா வைரஸுக்கான ....

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

### ‘பிளாக்பஸ்டர்’ தடுப்பு மருந்துகள்

நிமோனியாவை ஏற்படுத்தும் பாக்டீரியாக்களிலிருந்து குழந்தைகள் மற்றும் பெரியவர்களைப் பாதுகாக்கப் பயன்படுத்தப்படும் தடுப்பு மருந்தான ப்ரீவெனார் போன்ற கண்டுபிடிப்புகள் இந்தத் துறையில் குறிப்பிடத்தக்க வகையில் வணிகத்திலும் கூட வெற்றி கண்டுள்ளன. உலகளவில் 2019 ஆம் ஆண்டில் அதிக விற்பனையாகும் முதல் 10 மருந்துகளில் ப்ரீவெனார் தடுப்பு மருந்தும் ஒன்றாகும், இது 5.8 பில்லியன் டொலர்களை ஈட்டித் தந்தது என அறிவியல் சஞ்சிகையான நேச்சர் தெரிவிக்கிறது.

இதே நிறுவனம் தயாரித்த "வயகரா" விற்பனையை மிஞ்சும் அளவிற்கு ப்ரீவெனர் தடுப்பு மருந்து "பிளாக்பஸ்டர்" தடுப்பு மருந்தாக விளங்கியது.

### கொரோனா வைரஸ் தடுப்பு மருந்து

எனவே பணப் புழக்கம் அதிகம் இருக்கும் சந்தைகளில் அதிக லாபம் ஈட்ட முடியும். குறைந்தபட்சம் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுச் செலவுகளையாவது பணக்கார நாடுகளின் சந்தைகள் ஏற்றுக்கொள்ளும்.

ஒரு புதிய தடுப்பு மருந்தை உருவாக்குவதற்கு 1.8 பில்லியன் டாலர்கள் வரை செலவாகும் என்று பிரிட்டனில் உள்ள மருந்துகளுக்கான தொழில் சங்கம் மதிப்பிடுகிறது.

நாம் பெரும் சந்தைகளுக்கு மத்தியில் தடுப்பு மருந்துகளை விற்க அனுமதித்தால், பணக்கார நாடுகளில் உள்ளவர்களுக்கு மட்டுமே கோவிட் - 19 தடுப்பூசி கிடைக்கும் என்று லண்டன் ஸ்கூல் ஆஃப் ஹைஜீன் அண்ட் டிராபிகல் மெடிசின் பேராசிரியர் மார்க் ஜிட் பிபிசியிடம் விளக்கம் அளிக்கிறார்.

இறுதியில் கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தில் மிகப் பெரிய மருந்து நிறுவனங்கள் ஒரு பெரும் பங்கு வகிக்கும் என்பதற்கான சாத்தியம் அதிகமாக உள்ளது. உண்மையில் பெரிய மருந்து நிறுவனங்களிடம் இருந்து கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தை உருவாக்கும் யோசனைகள் உருவாகி இருக்காது, ஆனால் இறுதியில் தடுப்பூசிகளைத் தயாரித்து அதைச் சந்தைக்கு கொண்டு வருவதற்கான பொருளாதார வசதி அவர்களிடம் தான் உள்ளது என்கிறார் மருத்துவத் துறையின் பொருளாதார ஆராய்ச்சியாளர் ஆனா நிக்கோலஸ்.

### ஒருமித்த கருத்து

உதாரணமாக, இனோவியோ போன்ற ஒரு மருந்து நிறுவனம் மற்ற மருந்து நிறுவனத்துடன் கூட்டு சேர்ந்து தான் 100 மில்லியன் கணக்கான கோவிட் 19 வைரசுக்கான தடுப்பு மருந்துகளைத் தயாரிக்க முடியும். மேலும் கோவிட் - 19 டி.என்.ஏ அடிப்படையிலான தடுப்பு மருந்து வெற்றிகரமாக நிரூபிக்கப்பட வேண்டும்.

கடந்த சில ஆண்டுகளாக உலகளாவிய அளவில் தடுப்பு மருந்துகளை அனைவருக்கும் சென்று சேர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன் சில பெரிய நிறுவனங்கள் பணியாற்றி வருகின்றன.

உலகின் மிகப்பெரிய மருந்து நிறுவனங்களில் ஒன்றான இங்கிலாந்தின் கிளாக்சோஸ்மித்க்லைன் (ஜி.எஸ்.கே) என்ற நிறுவனம் கோவிட் - 19 தடுப்பு மருந்தை உருவாக்கப் பல கூட்டமைப்புகளில் ஈடுபட்டு பணியாற்றி வருகின்றனர். COVID - 19 வைரஸை முழுமையாக ஒழிக்க சுகாதாரத்துறையில் பணிபுரியும் அனைவரிடமிருந்தும் ஒரு கூட்டு முயற்சி தேவைப்படுகிறது என்று இந்நிறுவனத்தின் முதன்மை நிர்வாக அதிகாரி எம்மா வால்ம்ஸ்லி ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நோய்த்தடுப்பு மருந்து அனைவருக்கும் சரியான நேரத்தில் சென்று சேர வேண்டுமானால் இந்த ஒருமித்த கருத்து முக்கியமாக இருக்க வேண்டும் என்று சேத் பெர்க்லி நம்புகிறார்.

நிச்சயமாக உலகளாவிய அளவில் அனைவருக்கும் தடுப்பு மருந்து என்பது உடனடியாக நடக்காது

யாருக்கு அதிகம் இந்த தடுப்பு மருந்து தேவைப்படுகிறதோ அவர்களுக்கு முதலில் இந்த தடுப்பு மருந்தைச் சென்று சேர்க்காவிட்டால், நிச்சயம் இந்தத் தொற்றுத் தொடர்ந்து பரவிக்கொண்டே இருக்கும்.

# கொரோனாவிலிருந்து உங்களை பாதுகாக்க இந்த மூலிகைகளை பயன்படுத்துங்க!!

உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸால் சுமார் 45 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். 8 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் இந்த வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். உலக மக்கள் அனைவரும் மிகுந்த அச்சத்தில் உள்ளனர். உலகில் பல நாடுகள் முற்றிலுமாக முடங்கியுள்ளன. கொரோனா வைரஸ் தங்களை தாக்கமல் இருக்க தங்களை தாங்களே தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும். அதுமட்டுமல்லாமல், உங்களையுடைய நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்க வேண்டிய நேரம் இது. ஏனெனில், கொரோனாவை எதிர்த்துப் போராடுவதற்கு நோய் எதிர்ப்புச் சக்தி மிக முக்கியமானதாகும். நம்முடைய உடல் இயற்கையாகவே நோய் எதிர்ப்புத் தன்மை கொண்டதாகும். இதனால் நம்முடைய உடல் நோய்க் கிருமிக்கு எதிரான ஆண்டிபையாட்டிக்கை உருவாக்கிக் கொள்ளும். கொரோனாவை பொருத்தவரை உலகம் முழுவதும் லட்சக்கணக்கான மக்கள் நோயால் பாதிக்கப்பட்டிருந்தாலும் நோய் எதிர்ப்புத் திறன் கொண்டவர்கள் அவற்றிலிருந்து குணமடைந்துள்ளனர்.

இப்போதுள்ள காலகட்டத்தில் பக்கவிளைவுகள் ஏதுமற்ற, நஞ்சற்ற இயற்கையான உணவு முறைகளை நாடிச் செல்வதே சிறந்தது. இந்த இயற்கை உணவு முறைகளில் சிறந்த நோய் எதிர்ப்பு சக்தியை அளிக்கக் கூடிய மூலிகை பொருட்களைப் பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

**சீந்தில் கொடி (அம்ருதவல்லி)**

**தாவரவியலில்** டைனோஸ்போராகார்டிஃபோலியா



என்று அழைக்கப்படும் சீந்தில் கொடி ஒரு ஆயுர்வேத மூலிகையாகும். ஆயுர்வேத மருத்துவத்தில் பல்வேறு நோய்களைத் தீர்க்கும் மருந்தாக இது பயன்படுத்தப்பட்டு வருகிறது. சீந்தல் கொடியின் தண்டு ஒரு நல்ல மருந்தாகப் பயன்படுவதோடு மட்டுமல்லாமல் ரசாயனமாகவும் பயன்படுகிறது. அது நம் உடல் உறுப்புகளைச் சீராகவும் நேர்த்தியாகவும் செயல்பட உதவுகிறது. சீந்தில் கொடி, நாள்பட்ட இருமல், ஒவ்வாமை, நாசி அழற்சி போன்ற நோய்களைத் தீர்க்க வல்லது. மேலும் ஆஸ்துமாவை குணப்படுத்தும் தன்மை கொண்டது எனவும் கூறப்படுகிறது.

**பயன்படுத்தும் முறை:** உங்களுக்கு போதுமான அளவு தண்ணீரில் சீந்தில் கொடியின் தண்டை நன்றாகக் கொதிக்க வைத்து அவற்றின் சாற்றை வெறும் வயிற்றில் குடிக்கவும்.

**துளசி**

புனிதத் தன்மை கொண்ட துளசி, சித்த மற்றும் ஆயுர்வேத



மருத்துவத்தில் அதிகப்படியான நோய்களை நீக்கும் மருந்தாகப் பயன்படுகிறது. நோய்களைக் குணப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் தன்மை வாய்ந்ததாகும். துளசி இலையின் சாறு தொற்று நோய்களைத் தீர்க்கவல்லது என சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**பயன்படுத்தும் முறை:** உங்களுக்கு போதுமான அளவு தண்ணீரில் 5 – 6 துளசி இலைகளை வேகவைத்து துளசி டீ தயாரியுங்கள்.

**பூண்டு**

சமையலறையில் தவறாத இடம் பிடித்திருக்கும் பூண்டு, ரத்த வெள்ளை அணுக்களை உற்பத்தி செய்வதன் மூலம் நோய் எதிர்ப்புச்



சக்தியை அதிகரிக்கவும் உதவுகிறது. இதனால் நோய் எதிர்ப்பு மண்டலம் வலுப்பெற வழிவகுக்கிறது.

**பயன்படுத்தும் முறை:** வெதுவெதுப்பான தண்ணீரில் 1 – 2 கிராம்புடன் பூண்டைச் சேர்த்து தினந்தோறும் வெறும் வயிற்றில் குடித்து வரவும். மேலும் உணவிலும் பூண்டை தவறாமல் சேர்த்துக் கொள்ளுங்கள்.

**மஞ்சள்**

மஞ்சளில் உள்ள குர்குமின் நோய் எதிர்ப்புச் சக்தியாகப் பயன்படுவதோடு மட்டுமல்லாமல், நுரையீரலின் வீக்கத்தைச் சரிசெய்யவும் பயன்படுகிறது. மேலும், சளி மற்றும் இருமலைக் குணப்படுத்தவும் பயன்படுகிறது. சிறந்த நுண்ணுயிர்க் கொல்லியாகப் பயன்படும் மஞ்சள், பல



நோய்களுக்கு மருந்தாகவும், நிவாரணியாகவும் பயன்படுகிறது.

**பயன்படுத்தும் முறை:** இஞ்சி மற்றும் எலுமிச்சை கலந்து தயாரிக்கும் டீயில் சிறிதளவு மஞ்சளைக் கலந்து ஒரு நாளைக்கு இருவேளைக் குடிக்கவும். மேலும் தினசரி தயாரிக்கும் உணவில் மஞ்சளைப் பயன்படுத்துங்கள்.

**இஞ்சி**

பண்டைய மூலிகையான இஞ்சி, நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல் நுரையீரல் அழற்சியைக்



குணப்படுத்தவும் உதவுகிறது. இஞ்சி சாறு பெரியவர்களுக்கு நிமோனியா மற்றும் சுவாசக் குழாய் நோய் போன்றவற்றைத் தடுப்பதற்கு பயன்படுகிறது. இஞ்சி, டீ – செல்களில் வளர்ச்சியை அதி



கப்படுத்துவதன் மூலம் குளிர் மற்றும் இருமலுக்கு எதிராகப் போராடவும் உதவுகிறது.

**பயன்படுத்தும் முறை:** தண்ணீரில் இஞ்சியைச் சேர்த்து தயாரிக்கும் டீயில் சிறிதளவு தேன் கலந்து ஒரு நாளைக்கு இரண்டு முறை குடிக்கவும். மேலும், இதை உங்கள் அன்றாட உணவிலும் சேர்க்கலாம்.

**இலவங்கப்பட்டை**

இந்த மனம் நிறைந்த மூலிகை, ஆக்ஸிஜனேற்ற சேர்மங்களின் சிறந்த மூலக்கூறாகும். நோய் எதிர்ப்பை தூண்டும் இலவங்கப் பட்டை உடலின் குளிர்ச்சியைத் தடுப்பதோடு மட்டுமல்லாமல், இருமல் மற்றும் அழற்சி நோய்கள் குணப்படுத்தவும் உதவுகிறது. இலவங்கப்பட்டையில் தயாரிக்கப்படும் பாலிப்பினால் சாறு நோய் எதிர்ப்பு செயல்பாட்டை ஒழுங்குபடுத்துகிறது மற்றும் நுண்ணுயிரிகளுக்கு எதிராகவும் போராடுகிறது.

**பயன்படுத்தும் முறை;** வெதுவெதுப்பான தண்ணீரில் இலவங்கப்பட்டை தூளுடன் சிறிதளவு தேன் கலந்து தினந்தோறும் காலையில் குடித்து வரவும்.

**கிராம்பு**

கிராம்பு, பல நோய்களுக்குச் சிகிச்சை அளிக்க நாட்டுப்புற மருத்துவத்தில் இது நீண்ட காலமாகப் பயன்படுத்தப்படுகிறது. வைரஸ் மற்றும் பாக்டீரியாக்களை இணைத்து சமநிலைப் படுத்துவதன் மூலம் நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்துகிறது என ஒரு ஆய்வு கூறுகிறது. கிராம்பு, உடல்



அழற்சியைக் குறைப்பதோடு மட்டுமல்லாமல், நுரையீரலின் வீக்கத்தைக் குறைக்கவும், சளியை வெளியேற்றவும் உதவுகிறது.

**பயன்படுத்தும் முறை:** 4 – 5 கிராம்புகளைத் தண்ணீரில் கொதிக்க வைத்து கிராம்பு தேநீர் குடிக்கவும். மேலும், உங்கள் இனிப்பு மற்றும் கறிகளுக்குக் கிராம்பு சேர்க்கவும்.

**வெங்காயம்**

வெங்காயத்தில் வைட்டமின் சி, செலினியம் மற்றும் துத்தநாகம் போன்ற பல மூலக்கூறுகள் உள்ளதால் இவை உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கச் செய்யும். வெங்காயத்தில் உள்ள குர்செடின் மிகவும் சக்தி வாய்ந்த ஆக்ஸிஜனேற்றியாகும். இது அழற்சிகளை குணப்படுத்தும் தன்மை கொண்டது. நோய்க் கிருமிகளுக்கு எதிரான நோய் எதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத்த வெங்காயம் உதவுகிறது.

**பயன்படுத்தும் முறை:** சில வெங்காயத் துண்டுகளை தண்ணீரில் 7 – 8 மணி நேரம்



வரை ஊற வைத்து, அந்த தண்ணீரை 3 – 4 டீஸ்பூன் தண்ணீரை மூன்று அல்லது நான்கு முறை ஒரு நாளைக்குக் குடித்து வரவும். மேலும் உணவில் தவறாமல் வெங்காயத்தை சேர்த்துக் கொள்ளவும். கற்பூரவல்லி இது ஒரு பூஞ்சை காளான், பாக்டீரியா எதிர்ப்பு மற்றும் நோய் எதிர்ப்பு பண்புகளைக் கொண்டுள்ளது.

**கற்பூரவல்லி**

டி – செல் பினோடைப்களின் உற்பத்தியைத் தூண்டுவதன் மூலமும், வெள்ளை மற்றும் சிவப்பு இரத்த அணுக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலமும் ஒருவரின் ஆரோக்கியத்தையும் செயல்தி



றனையும் மேம்படுத்துகிறது. கற்பூரவல்லி நோய்க்கிருமிகளால் ஏற்படும் அழற்சியைக் குறைக்க உதவுகிறது.

**பயன்படுத்தும் முறை:** 1 – 3 சொட்டு கற்பூரவல்லி எண்ணெய்யை எடுத்து வெதுவெதுப்பான நீரில் கலந்து குடிக்கவும்.

**குங்குமப்பூ**

குங்குமப்பூ 90 க்கும் மேற்பட்ட நோய்களை குணப்படுத்தக்கூடியது. இதிலுள்ள ஆன்டி ஆக்சிடன்ட்களும், கரோட்டினும் அதிக நன்மைகளை தரக்கூடியது. இதில் வைட்டமின் சி மற்றும் மாங்கனீசு எலும்புகளைப் பலப்படுத்தவும், திசுக்களை சரிசெய்யவும், செக்ஸ் ஹார்மோன்களை தூண்டவும் பயன்படுகிறது. ஆறு வாரங்களுக்கு 100 மி.கி குங்குமப்பூவை உட்கொள்வதால் ரத்த வெள்ளை அணுக்கள் அதிகரிக்கும் மேலும் ரத்த பிளேட்லெட்டுகளின்



எண்ணிக்கையையும் அதிகரிக்க உதவுகிறது.

**பயன்படுத்தும் முறை:** ஒரு சிட்டிகை குங்குமப்பூவைத் தண்ணீரில் கலந்து குங்குமப்பூ தேநீர் தயாரிக்கவும். இனிப்புகளைத் தயாரிக்கும் போது நீங்கள் அதைச் சேர்க்கலாம்.

காலைக்கதிர் Kalaikathir



# வரலாற்றின் மோசமான வைரஸ்கள்

# இறுதியில் எப்படி அழிக்கப்பட்டன தெரியுமா?

இன்று உலகமே வீட்டிற்குள் முடங்கியிருக்க காரணம் கொரோனா என்னும் கொடிய வைரஸ்தான். மனித நாகரிகம் தோன்றிய காலம் முதலே தொற்றுநோய்களும் அவ்வப்பொழுது தோன்றி மனிதர்களுக்கு சோதனையாக இருந்து வருகின்றன. மனிதர்கள் தோன்றிய காலம் முதலே ஒவ்வொரு நூற்றாண்டும் ஒரு கொடிய தொற்றுநோய் ஏற்பட்டு எண்ணற்ற மனித உயிர்களை பறித்துக் கொண்டிருந்தது.

ஒவ்வொரு முறையும் ஒரு தொற்றுநோய் ஏற்படும்போது அதனை அழிப்பது என்பது மிகப்பெரும் சவாலாக மனிதர்களுக்கு இருந்தது. அந்த வகையில் கொரோனா வைரஸிலிருந்து மனிதர்களை பாது காப்பது என்பதுதான் தற்போது விஞ்ஞானிக



ளின் முன் இருக்கும் மிகப்பெரிய சவாலாகும். ஆனால் ஒவ்வொரு முறையும் மனித இனம் தங்களை அச்சுறுத்திய தொற்றுநோயை அழித்து வெற்றி




பெற்றுதான் வந்துள்ளது. எப்படிப்பட்ட தொற்று நோய்க்கும் ஒரு முடிவு நிச்சயம் உள்ளது, அந்த வகையில் கொரோனாவுக்கும் ஒரு முடிவு நிச்சயம் உள்ளது. இந்த பதிவில் வரலாற்றில் இதற்குமுன் மனிதர்களை அச்சுறுத்திய வைரஸ்கள் எப்படி அழிக்கப்பட்டன என்று பார்க்கலாம்.

### ஜஸ்டினியனின் பிளேக்

வரலாற்றில் பதிவுசெய்யப்பட்ட மிக மோசமான மூன்று தொற்றுநோய்கள் யெர்சினியா பெஸ்டிஸ் என்ற ஒற்றை பாக்டீரியத்தால் ஏற்பட்டன, இது பிளேக் என அழைக்கப்படும் ஒரு அபாயகரமான தொற்று. ஜஸ்டினியனின் பிளேக் கி.பி 541 இல் பைசண்டைன் பேரரசின் தலைநகரான கான்ஸ்டான்டினோபிலுக்கு வந்தது. இது எகிப்திலிருந்து மத்தியதரைக் கடல் வழியாக பரவத் தொடங்கியது. இந்த கொடூரமான பாக்டீரியா எலிகளின் மீது சவாரி செய்தது.

### எப்படி மறைந்தது?

இந்த பிளேக் கான்ஸ்டான்டினோப்பிளை அழித்து ஐரோப்பா, ஆசியா, வட ஆபிரிக்கா மற்றும் அரேபியா முழுவதும் காட்டுத்தீ போல் பரவியது 30



முதல் 50 மில்லியன் மக்களைக் கொன்றது.அன்றையக் காலக்கட்டத்தில் இது உலக மக்கள் தொகையின் பாதி ஆகும். நோயுற்றவர்களைத் தவிர்க்க முயற்சிப்பதைத் தவிர இதை எவ்வாறு எதிர்த்துப் போராடுவது என்பது பற்றி மக்களுக்கு உண்மையான புரிதல் இல்லை என்று டீபால் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுப் பேராசிரியர்கள் கூறினார். இந்த பிளேக் நோய் எப்படி மறைந்தது என்பதற்கு தெளிவான விளக்கங்கள் இல்லை, இதற்கான சிறந்த யூகமாக கருதப்படுவது இந்த பேரழிவில் இருந்து உயிர்பிழைத்தவர்கள் மற்றவர்களை விட அதிக நோயெதிர்ப்பு சக்தி கொண்டவர்களாக இருந்திருப்பார்கள் என்பதே.

### ப்ளாக் டெத்

பிளேக் உண்மையில் ஒருபோதும் போகவில்லை, 800 ஆண்டுகளுக்குப் பிறகு அது திரும்பியபோது, அது பொறுப்பற்ற முறையில் கையாளப்பட்டது. 1347 இல் ஐரோப்பாவைத் தாக்கிய பிளாக் டெத், வெறும் நான்கு ஆண்டுகளில் 200 மில்லியன் உயிர்களை பலிகொண்டது. இந்த பேரழிவை எப்படி தடுப்பது என்ற புரி தல் நீண்ட காலமாக மக்களுக்கு இல்லை. ஆனால் தொடர்புகள் மூலம்தான் இது பரவுகிறது என்பதை ஒருவழியாக அவர்கள் கண்டறிந்தனர்.

### தனிமைப்படுத்துதல் கண்டறியப்பட்டது?

தொடர்புகள் மூலம் இது பரவுவதை கண்டறிந்த




அதிகாரிகள் துறைமுக நகரமான ரகுசாவில் புதிதாக வந்த மாலுமிகளை நோய்வாய்ப்படவில்லை என்பதை நிரூபிக்கும் வரை தனிமையில் வைக்க முடிவு செய்தனர். முதலில், மாலுமி கள் தங்கள் கப்பல்களில் 30 நாள்கள் தடுத்து வைக்கப்பட்டனர், இது வெனிஸ் சட்டத்தில் ஒரு ட்ரெண்டினோ என அறியப்பட்டது. நேரம் செல்ல செல்ல, வெனிஸ் கட்டாய தனிமைப் படுத்தலை 40 நாடள்கள் அல்லது ஒரு தனி மைப்படுத்தலாக அதிகரித்தது, தனிமைப்படுத் துதல் என்னும் வார்த்தை இதற்கு பின்தான் மேற்கத்திய நாடுகளில் பிரபலமானது. இது நல்ல பலனை ஏற்படுத்தியது.

### லண்டனின் பெரிய பிளேக்

பிளாக் டெத் க்கு பிறகு பேரழிவை சந்திக்க லண்டன் அதிக காலம் எடுத்துக்கொள்ளவில்லை. இந்த பிளேக் ஒவ்வொரு 20 ஆண்டுக ளுக்கும் 1348 முதல் 1640 வரை 300 ஆண்டுகளுக்கு நீடித்தது. ஒவ்வொரு புதிய பிளேக் தொற்றுநோயிலும், பிரிட்டிஷ் தலைநகரில் வாழும் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளில் 20 சதவீதம் பேர் கொல்லப்பட்டனர்.

### எப்படி தடுக்கப்பட்டது?

1500 களின் முற்பகுதியில், நோயுற்றவர்களைப் பிரித்து தனிமைப்படுத்த இங்கிலாந்து முதல் சட்டங்களை விதித்தது. பிளேக் நோயால் பாதிக்கப்பட்ட வீடுகள் வெளியில் ஒரு கம்பத்திற்கு வைக்கோல் வைக்கப்பட்டிருந்தன. குடும்ப உறுப்பினர்களை பாதித்திருந்தால், அவர்கள் வெளியில் சென்றபோது ஒரு வெள்ளை கம்பத்தை எடுத்துச் செல்ல வேண்டியிருந்தது. பூனைகள் மற்றும் நாய்கள் இந்த நோயை பரப்புவதாக நம்பப்பட்டது, எனவே இலட்சக்கணக்கான விலங்குகள் மொத்தமாக படுகொலை செய்யப்பட்டது.

### 1665 ஆண்டின் பிளேக்

1665 ஆம் ஆண்டின் பிளேக் பல நூற்றாண்டுகளாக வெடித்ததில் கடைசி மற்றும் மோசமான ஒன்றாகும், வெறும் 7 மாதங்களில் 1,00,000 லண்டன் வாசிகள் இந்த நோயால் கொல்லப்பட்டனர். அனைத்து பொது பொழுதுபோக்குகளும் தடை செய்யப்பட்டன மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் வீடுகளுக்குள் வலுக்கட்டாயமாக அடைக்கப்பட்டனர். மன்னிப்புக்கான வேண்டுகோளுடன் சிவப்பு சிலுவைகள் அவர்களின் கதவுகளில் வரையப்பட்டன, ஆண்டவர் எங்களுக்கு இரக்கம் காட்டுங்கள் என்று அதில் எழுதப்பட்டது. நோயுற்றவர்களை வீடுகளில் அடைத்து வைத்து, இறந்தவர்களை மொத்தமாக அடக்கம் செய்வது எவ்வளவு கொடூரமானது, இந்த பிளேக் வெடிப்பை முடிவுக்குக் கொண்டுவந்ததற்கான ஒரே வழி இதுவாக இருந்திருக்கலாம்.


### பெரியம்மை

பெரியம்மை ஐரோப்பா, ஆசியா மற்றும் அரேபியாவிற்கு பல நூற்றாண்டுகளாக பரவியது, இது ஒரு தொடர்ச்சியான அச்சுறுத்தலாக இருந்தது. இது பத்து பேரில் மூன்று பேரைக் கொன்றது. மற்றும் மீதமுள்ளவர்களை பொக்மார்க் செய்யப்பட்ட வடுக்களை ஏற்படுத்தியது. அப்போதிருந்த பழைய உலகத் தில் இந்த நோயால் ஏற்பட்ட இறப்பு விகிதம் என்பதும் மிகவும் அதிகமாகும். நவீனகால மெக்ஸிகோ மற்றும் அமெரிக்காவின் பழங்குடி மக்களுக்கு பெரியம்மை நோய்க்கு பூஜ்ஜிய இயற்கை நோய் எதிர்ப்பு சக்தி இருந்தது மற்றும் இந்த வைரஸ் பல்லாயிரக்கணக்கான மக்களை அழித்தது.

### எப்படி தடுக்கப்பட்டது?

பல நூற்றாண்டுகள் கழித்து, பெரியம்மை ஒரு தடுப்பூசி மூலம் முடிவுக்கு வந்த முதல் வைரஸ் தொற்றுநோயாக மாறியது. 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், எட்வர்ட் ஜென்னர் என்ற பிரிட்டிஷ் மருத்துவர், கவ்பாக்ஸ் எனப்படும் லேசான வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் பெரியம்மையில் இருந்து விடுபடுவதைக் கண்டறிந்தார். ஜென்னர் தனது தோட்டக்காரரின் 9 வயது மகனுக்கு கவ்பாக்ஸ் தடுப்பூசியை செலுத்தினார், பின்னர் அவரை பெரியம்மை வைரஸால் பாதிக்கவில்லை. 1801 இல் ஜென்னர் எழுதினார்:

(18 ஆம் பக்கம் பார்க்க...)



# முடிவுக்கு வரப்போகிறது கொரோனாவின் கோரத்தாண்டவம்

## நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி கூறிய நல்ல செய்தி...!



கொரோனா வைரஸ் உலகத்தையே முடங்கியுள்ளது. உலகின் வல்லரசு நாடுகள் கூட கொரோனா வைரஸை சமாளிக்க முடியாமல் தங்கள் மக்களின் உயிரை பறிகொடுத்து வருகின்றன.

இந்தியாவிலும் கொரோனாவின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இந்தியா முழுவதும் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ள நிலையில் கொரோனா வைரஸ் இன்னும் மூன்றாம் கட்டத்தை எட்டாமல் இருக்கிறது. கொரோனாவின் முடிவுக்காக உலகமே காத்திருக்கும் நிலையில் அதனை தடுக்கும் தடுப்பூசியை கண்டுபிடிப்பதற்காக உலகம் முழுவதும் பல நாடுகள் தீவிரமான ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றன. இந்த நிலையில் நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானியான மைக்கேல் லெவிட் கொரோனா வைரஸ் விரைவில் முடிவுக்கு வரப்போகிறது என்று உலக மக்களுக்கு ஒரு நல்ல செய்தியை கூறியுள்ளார். இந்த பதிவில் அவரின் அறிக்கை மற்றும் கொரோனாவின் முடிவு பற்றி பார்க்கலாம்.

### தடுப்பூசி

கொரோனா வைரஸை கட்டுப்படுத்தும் சரியான தடுப்பூசி இன்னும் கண்டறியப்படவில்லை. தற்சமயம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவரவர் நோயெதிர்ப்பு திறனை பொறுத்து ரெம்டெசிவர், குளோரோகுயின், லோபினாவிர் மற்றும் ரிடோனாவிர் போன்ற மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. பல்வேறு உலக நாடுகள் இதற்கான தடுப்பு மருந்தை கண்டறிய கிட்டத்தட்ட 800 மில்லியன் டொலர் செலவழித்து வருகின்றன. இந்த வைரஸ் அழிய வேறுசில வழிகளும் உள்ளன.



### வைரஸ் பிறழ்வு

எந்தவொரு வைரஸும் நீண்ட காலத்திற்கு ஒரே மாதிரியான அமைப்பில் இருக்க முடியாது, அவற்றின் மரபணுக்கள் மாற்றங்களுக்கு உள்ளாகும். இதுதான் வைரஸ் பிறழ்வு என்று அழைக்கப்படுகிறது. இதனால் அந்த வைரஸ் பலவீனமடைய வாய்ப்புள்ளது. கொரோனா வைரஸும் சில காலங்களுக்கு பிறகு இந்த மாற்றத்திற்குள் உள்ளாகும். ஆனால் எப்பொழுது என்று இன்னும் கணிக்க முடியவில்லை. மைக்கேல் லெவிட் வேதியியல் அமைப்புகளின் சிக்கலான மாதிரிகளை உருவாக்குவதற்கான வேதியியலுக்கான 2013 நோபல் பரிசைப் பெற்ற அமெரிக்க - பிரிட்டிஷ் - இஸ்ரேலிய உயிர் இயற்பியலாளர். மைக்கேல் லெவிட், கொரோனா வைரஸ் விரைவில் முடிவுக்கு வரும் என்று நம்பிக்கையுடன் தெரிவித்துள்ளார். அவரது கருத்துப்படி வேகமாக பரவும் இந்த நோயின் வேகம் படிப்படியாக நிறுத்தப்பட வாய்ப்புள்ளது. சீனாவில் இவ்வாறுதான் கட்டுப்பாட்டிற்கு வந்துள்ளதாக லெவிட் கூறியுள்ளார்.


எந்தவொரு வைரஸும் நீண்ட காலத்திற்கு ஒரே மாதிரியான அமைப்பில் இருக்க முடியாது, அவற்றின் மரபணுக்கள் மாற்றங்களுக்கு உள்ளாகும். இதுதான் வைரஸ் பிறழ்வு என்று அழைக்கப்படுகிறது. இதனால் அந்த வைரஸ் பலவீனமடைய வாய்ப்புள்ளது. கொரோனா வைரஸும் சில காலங்களுக்கு பிறகு இந்த மாற்றத்திற்குள் உள்ளாகும். ஆனால் எப்பொழுது என்று இன்னும் கணிக்க முடியவில்லை.


### தனிமைப்படுத்துதல்

டிசம்பர் மாதம் பரவ தொடங்கிய கொரோனா வைரஸைப் பற்றி லெவிட் ஜனவரி மாதம் முதலே தீவிரமாக கவனித்து வருகிறார். அவர் கண்டறிந்த வரை முதலில் உலக மக்களின் கொவிட் 19 குறித்த பீதியைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று கூறியுள்ளார். மேலும் கொரோனா பரவுவதை கட்டுப்படுத்த அடிப்படையாக சமூகத்தில் இருந்து விலகி தனிமைப்படுத்துதலை தீவிரமாக கடைபிடிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

### லெவிட்டின் கணிப்பு

லெவிட்டின் கணிப்பின்படி பெப்ரவரியில் சீனாவில் சுமார் 3,250 இறப்புகளுடன் 80,000 எண்ணிக்கையிலான உறுதிப்படுத்தப்பட்ட நோயாளிகள் இருப்பர் என்று எதிர்பார்க்கப்பட்டது. பெப்ரவரி நடுப்பகுதியில் மொத்தம் 80,298 நோயாளிகள் மற்றும் 3,245 இறப்புகளுடன் அவரது கணிப்பு கிட்டத்தட்ட சரியாகிவிட்டது. சீனாவில் கொரோனா வைரஸ் பரவியுள்ள போதிலும், மார்ச் 16 முதல் புதிதாக கண்டறியப்பட்ட நோயாளிகளை சீனா கண்டிருக்காது.

### லெவிட்டின் ஆராய்ச்சி

ஒவ்வொரு நாளும் 50 க்கும் மேல் புதிதாகப் பாதிக்கப்பட்டவர்களைக் கொண்ட 78 நாடுகளின் தரவை ஆராய்ந்த பின்னர், மைக்கேல் லெவிட் சில மீட்பு அறிகுறிகளை கண்டறிந்தார். அவரது முக்கிய கவனம் ஒட்டுமொத்த புள்ளிவிவரத்தில் அல்ல, ஆனால் ஒவ்வொரு நாளும் அடையாளம் காணப்பட்ட புதிய நோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் அந்த எண்ணிக்கையில் ஒரு நாளிலிருந்து அடுத்த நாளுக்கு ஏற்பட்ட மாற்றம் ஆகியவற்றை கவனித்து வருகிறார்.



### லெவிட்டின் பேட்டி

சமீபத்தில் லெவிட் அளித்த பேட்டி ஒன்றில் விரைவில் உலகம் கொரோனாவில் இருந்து தப்பிக்கப் போகிறது என்று கூறியுள்ளார். மேலும் நோய் பரவும் எண்கள் கவலை அளிப்பதாக இருக்கின்றன, ஆனால் நோயின் வளர்ச்சி விகிதம் குறைவதன் தெளிவான அறிகுறிகள் உள்ளன எனக் கூறியுள்ளார். சமூக விலகல் மற்றும் காய்ச்சலுக்கு எதிராக தடுப்பூசி போடுவது இரண்டுமே பரவலைக் கட்டுப்படுத்த மிகவும் முக்கியமானவை என்றும் கூறியுள்ளார். ஊடகங்கள் தேவையற்ற பீதியை பரப்புவதாக லெவிட் வருத்தப்பட்டுள்ளார்.

### இத்தாலி செய்த தவறு

இத்தாலியில் வயதானவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாலும் அவர்கள் சமூக வாழ்க்கையில் அதிக ஈடுபாட்டுடன் இருப்பதும் அங்கு பெரிய அளவில் இழப்புகளை ஏற்படுத்தும் என்று லெவிட் முன்கூட்டியே கணித்திருந்தார். மேலும் இத்தாலியர்களின் கலாச்சாரம் வேடிக்கை நிறைந்ததாகவும், வளமான சமூக வாழ்க்கையை கொண்டுள்ளதாலும் அவர்களை தனிமைப்படுத்துதல் கடினமானது என்று அவர் கூறியுள்ளார். இத்தாலியின் வலுவான தடுப்பூசி எதிர்ப்பு இயக்கம் அதிக பாதிப்பு ஏற்படுத்துவதற்கு ஒரு காரணியாக இருக்கலாம் என்று அவர் விளக்கியுள்ளார்.

### என்ன செய்ய வேண்டும்?

கொவிட் 19 வைரஸை தடுக்கும் மருந்து கண்டுபிடிக்க முடியாத சூழலில் கொரோனா பரவுதலில் இருந்து தப்பிக்கவும், தடுக்கவும் சமூகத்தில் இருந்து விலகி இருப்பதே இப்போதைக்கு ஒரே வழி என்று லெவிட் கூறியுள்ளார். தனிமைப்படுத்தலை தவிர இதிலிருந்து தப்பிக்க வேறு வழியில்லை, அதேசமயம் நம்முடைய நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கூறியுள்ளார்.



# ஏழாலை, குப்பிளான் பகுதி மக்களின் நிவாரணப் பணிக்கு 15 லட்சம் ரூபா!

## அப்பகுதி புலம்பெயர் தமிழர் சிவகாந்தன் வழங்கினார்





யாழ்ப்பாணம்,ஏப்.05

கொரோனா அச்சம் காரணமாக நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைமைகளை கருத்தில் கொண்டு நிவாரண பணிகளுக்காக 15 லட்சம் ரூபாவைப் புலம்பெயர் தமிழர் ஒருவர் வழங்கியுள்ளார். இந்நிதி மூலம் வலி தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட ஏழாலை மற்றும் குப்பிளான் கிராமங்களில் வாழும் சுமார் 1500 குடும்பங்களுக்கு அத்தியாவசிய பொருள்கள் வழங்குகின்ற செயற்பாடு இன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது. ஏழாலை கிராமத்தைச் சேர்ந்தவரும் லண்டனில் வசித்து வருபவருமான சிவலிங்கம் சிவகாந்தன் என்ற புலம்பெயர் தமிழரே தனது கிராம மக்களின் நலனகருதி நிவாரண பணிகளுக்காக சுமார் 15 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமை காரணமாக அன்றாடம் தொழில் புரிவோர் பலரும் தமது வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர். இதனால் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் ஏழாலை மைந்தனான சிவகாந்தனை தொடர்பு கொண்டு வாழ்வாதாரத்தை இழந்துள்ள மக்களுக்கு உதவுமாறு விநயமாகக் கேட்டுள்ளனர். இதையடுத்து உடனடியாக செயற்பட்ட சிவகாந்தன் யாரும் எதிர்பாராத விதமாக 15 லட்சம் ரூபாவை ஏழாலையின் சமூக செயற்பாட்டாளர் செல்வகாந்தனிடம் வழங்கியுள்ளார். இதன் மூலம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் மற்றும் பா.கஜதீபன் ஆகியோரின் அறிவுறுத்தலுக்கமைய ஏழாலை மற்றும் குப்பிளான் கிராமங்களில் வாழும் சுமார் 1500 குடும்பங்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. இந்த அத்தியாவசியப் பொருள்கள் வழங்குகின்ற செயற்பாடு நேற்றுக்காலை வலி. தெற்கு பிரதேச சபைத் தலைவர் க.தர்சன் தலைமையில் ஆரம்பித்துள்ளது.



தனது சொந்த கிராமத்திற்கு நிவாரணப்பணிகளுக்காக மிகப்பெரிய தொகையை வழங்கிய சிவகாந்தனின் அர்ப்பணிப்பை ஊர்மக்கள் மட்டுமின்றி பலரும் பாராட்டி வருகின்றனர்.

# வரலாற்றின் மோசமான..

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மனித இனத்தின் மிக பயங்கரமான கசப்பான பெரியம்மை நோயை அவர் நிர்மூலமாக்குவது. அவர் சொன்னது சரிதான். பெரியம்மை முற்றிலும் ஒழிய இரண்டு நூற்றாண்டுகள் தேவைப்பட்டது. 1980 ஆம் ஆண்டில் உலக சுகாதார நிறுவனம் பெரியம்மை பூமியிலிருந்து முற்றிலுமாக ஒழிக்கப் பட்டதாக அறிவித்தது.

### காலரா

19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், காலரா இங்கிலாந்து வழியாக சென்று பல்லாயிரக்கணக்கான மக்களைக் கொன்றது. அன்றைய நடைமுறையில் இருந்த விஞ்ஞானக் கோட்பாடு, இந்த நோய் மியாஸ்மா எனப்படும் தவறான காற்றினால் பரவுவதாகக் கூறியது. ஆனால் ஜான் ஸ்னோ என்ற பிரிட்டிஷ் மருத்துவர் முதல் அறிகுறிகளின் சில நாட்களில் அதன் பாதிக்கப்பட்டவர்களைக் கொன்ற மர்ம நோய் லண்டனின் குடிநீரில் பதுங்கியிருப்பதாக சந்தேகித்தார்.

### எப்படி கண்டறியப்பட்டது?

ஜான் ஸ்னோ ஒரு துப்பறிவாளரைப் போல செயல்பட்டார், நோயின் காரணத்தைக் கண்டறிய மருத்துவமனை பதிவுகள் மற்றும் சவக்கிடங்கு அறிக்கைகளை விசாரித்தார். அவர் 10 நாட்களில் காலரா இறப்புகளின் புவியியல் விளக்கப்படத்தை உருவாக்கி, குடிநீருக்கான பிரபலமான நகர கிணறான பிராட் ஸ்ட்ரீட் பம்பைச் சுற்றியுள்ள 500 அபாயகரமான இடங்களைக் கண்டறிந்தார்.

### எப்படி அழிக்கப்பட்டது?

தனது தீவிரமான முயற்சியால் ஸ்னோ உள்ளூர் அதிகாரிகளை பிராட் ஸ்ட்ரீட் குடிப்பழக்கத்தின் பம்ப் கைப்பிடியை நன்றாக அகற்றி, அதைப் பயன்படுத்த முடியாததாக மாற்றினார், அதன்பிறகு காலரா வேகமாக குறையத் தொடங்கியது. ஸ்னோவின் வேலை ஒரே இரவில் காலராவை குணப்படுத்தவில்லை, ஆனால் இது இறுதியில் நகர்ப்புற சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கும் குடிநீரை மாசுபடுவதிலிருந்து பாதுகாப்பதற்கும் உலகளாவிய முயற்சிக்கு வழிவகுத்தது. வளர்ந்த நாடுகளில் காலரா பெரும்பாலும் அழிக்கப்பட்டு விட்டாலும், மூன்றாம் உலக நாடுகளில் போதிய கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் சுத்தமான குடிநீருக்கான அணுகல் இல்லாததால் இன்றும் இது அவர்களை அச்சுறுத்துகிறது.



# வெளிமாவட்டங்களில் சிக்கி நெருக்கடியில் உள்ளவர்களை அழைத்துவருவதற்குப் பொறிமுறையொன்றை அமையுங்கள்!

## ஆளும் தரப்பினரிடத்தில் சிவசக்தி ஆனந்தன் பகிரங்க கோரிக்கை

வவுனியா,ஏப்.05

வவுனியா உட்பட தமிழர் தாயகப்பகுதிகளில் இருந்து தொழில் மற்றும் இதர காரணங்கள் நிமித்தம் தலைநகர் உள்ளிட்ட வெளிமாவட்டங்களுக்குச் சென்றவர்கள் மீண்டும் தமது சொந்த பிரதேசங்களுக்கு வரமுடியாது நெருக்கடியில் உள்ளார்கள்.

அவர்களது சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்தி அவர்களை அவரவர்களது இடத்துக்கு அழைத்து வருவதற்குரிய பொறிமுறையொன்றை உடன் அமைக்குமாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் ஆளும் தரப்பினரிடத்தில் பகிரங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் சம்பந்தமாக அவர் விடுத்துள்ள ஊடக அறிவிப்பில் தெரிவித்துள்ளவை வருமாறு:-

வவுனியா உட்பட தமிழர் தயாகத்திலிருந்து தொழில் நிமித்தமும், கற்றல், கற்பித்தல், மருத்துவ சிகிச்சைகள், வணிகம் உள்ளிட்ட இதரபல காரணங்களுக்காகவும் பலர் தலைநகர் கொழும்புக்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் சென்றுள்ளார்கள்.

மார்ச் மாதம் 19ஆம் திகதி மாலையில் நாட்டின் சொற்ப பகுதிகளுக்கு முதலில் ஊரடங்கு அறிவித்தல் விடுக்கப்பட்டாலும் பின்னர் அது நாடாளவிய ரீதியில் அமுலாக்கப்பட்டுதொடர்ச்சியாகநீட்டிக்கப்பட்டுவருகின்றது.

கொரோனாவின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக மாவட்டங்களுக்கிடையிலான பயணங்களும் தற்போது முழுமையாக தடைப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் அபாயவலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து அவசர தேவைகள் நிமித்தம் கூட எந்தவொரு நபரும் வெளியேற முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

விசேடமாக வவுனியாவிலிருந்து தொழில் நிமித்தம் கொழும்பு உள்ளிட்ட பகுதிகளுக்கு வந்தவர்கள் மீண்டும் திரும்பமுடியாது அங்கேயே சிக்கியுள்ளார்கள். உணவகங்கள் முதல் அனைத்தும் மூடப்பட்டிருப்பதால் அவர்கள்



அன்றாட வாழ்க்கையை கொண்டு செல்வதில் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்றார்கள்.

அதேபோன்று அவர்கள் சார்ந்த குடும்பத்தினரும் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுகின்றார்கள். இவ்வாறு வெளிமாவட்டங்களில் அகப்பட்டுள்ளவர்களில் பெருமளவானவர்கள் குடும்பத்தலைவர்களாக இருப்பதால் அவர்களின் குடும்பங்கள் அன்றாடப் பொருள்களைப் பெறுவதிலிருந்து பல விடயங்களில் இன்னல்களுக்கு முகங்கொடுத்தவண்ணமுள்ளனர்.

இவ்வாறான நிலையில் கொரோனா அபாயவலங்களில் இருந்து நபர்கள் வெளியேறுவதாலோ அல்லது அந்தப்பிரதேசங்களிற்கு புதியவர்கள் உள்நுழைவதாலோ தொற்றுப் பரவல் அதிகரிப்பதற்கான சாத்தியங்கள் இருக்கின்றது என்பதை காரணம் காட்டியே இவ்வாறானவர்கள் முடக்கப்பட்டுள்ளார்கள்.

அந்தக் காரணத்தில் நியாயப்பாடுகள் இருந்தாலும், மனிதாபிமான அடிப்படையில் இவ்வாறு வெளிமாவட்டங்களில் உணவையும், உறவுகளையும் இழந்து நட்டாற்றில் இருப்பவர்களை சொந்த பிரதேசங்களுக்கு அனுப்புவதற்கான பொறிமுறையொன்றை வகுக்க வேண்டும்.

வெளிமாவட்டங்களில் இருந்து சொந்த பிரதேசங்களுக்கு அழைத்துவரப்படுபவர்களை மருத்துவ பரிசோதனைக்கு உட்டுபடுத்துவதன் ஊடாகவே அல்லது சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவதன் ஊடாகவோ (முகாமிலோ அல்லது வீட்டிலோ) சமுகத்துடன் மீண்டும் இணைக்க முடியும்.

தற்போதைய சூழலில் ஊரடங்கு உத்தரவு ஏறக்குறைய மாதமொன்றை அண்மித்து வரும் நிலையில் இவர்களின் நிலைமைகளை புரிந்து கொண்டு மேற்கூறப்பட்ட காரணங்களை சீர்தூக்கிபார்த்து பொருத்தமான பொறிமுறையை உடன் முன்னெடுக்க வேண்டியது அவசியமாகின்றது. - என்றுள்ளது.

காலைக்கதிர் Kalaikathir

மாட்டு வண்டில்




தினம் ஒரு தலைப்பு

சித்திரப்போட்டி

இன்று (05/04/2020) தலைப்பு
மாட்டு வண்டில்

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

# வர்த்தக நிலையங்கள் இலாபம் பார்க்காது மக்கள் நலன் சார்ந்து செயற்படவேண்டும்

## யாழ். மாவட்ட செயலர் கோரிக்கை

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப். 05

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் அச்சுறுத்தலைப் பயன்படுத்தி பல வர்த்தகர்கள் அத்தியாவசியப் பொருட்களை அதிக விலைக்கு விற்பனை செய்வதாக ஏராளமான முறைப்பாடுகள் கிடைத்து உள்ளன எனத் தெரிவித்துள்ள மாவட்ட செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன், வியாபாரிகள் மக்கள் நலன்சார்ந்து செயற்படவேண்டிய தருணம் இது என்று சுட்டிக்காட்டியுள்ளார்

மாவட்ட செயலகத்தில் நேற்று மாலை அவர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் ஏற்பட்டு அதன் காரணமாக ஊரடங்குச் சட்டம் கடுமையாக அமல்படுத்தப்பட்டுள்ளது.யாழ். மாவட்டத்துக்கு தேவையான உணவுப் பொருட்கள் பாரவூர்திகள் மூலம் கொண்டுவரப்படுகின்றன. அதிலும் குறிப்பாக மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் கொழும்பில் இருந்து கொண்டு வரப்படுகின்றன.

அதற்கான நடவடிக்கைகள் அனைத்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எனவே வர்த்தகர்கள் அதிக விலைக்கு விற்கவேண்டிய அவசியம் ஏதும் இல்லை. எனினும் நமது அறிவுறுத்தல்களையும் மீறி சில தனியார் வர்த்தக நிலையங்கள் அதிக விலைக்கே அத்தியாவசியப் பொருட்களை விற்பனை செய்வதாகப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன

நாட்டில் தொற்றுநோய் ஏற்பட்டு மக்கள் பெரும் சிரமத்தில் உள்ளனர் இந்நிலையில் வர்த்தகர்கள் இலாபம் தேடும் முயற்சியிலேயே கவனம் செலுத்துகின்றனர் .

யாழ் மாவட்டத்தில் இருக்கின்ற வர்த்தகர்கள் மக்களின் மனநிலையை புரிந்து மனிதாபிமானம் ஆக செயல்படுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அதிக விலையில் விற்பனை செய்யும் கடைகள் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு பாவனையாளர் அதிகார சபையினர் களத்தில் இறங்கியுள்ளனர் – என்றார்.

# புத்தளத்தில் மற்றொருவர் தொற்றுக்குள்ளானார்!

புத்தளம்சாஹிராதேசியபாடசாலையில் தனிமைப்படுத்தும் நிலையத்தில் கண்காணிக்கப்பட்டு வந்த மற்றுமொருவருக்கு கொரோனா தொற்றுக்கான அறிகுறிகள் இருக்கின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிகுறிகளுடன் அடையாளம் காணப்பட்டுள்ள இப்பெண் கொழும்பு மருதானைப் பகுதியைச் சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது.

தனிமைப்படுத்தும் நிலையத்தில் வைத்து கண்காணிப்பு செய்து வந்த நிலையில் அவர் பரிசோதனைக்காக சிலாபம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.அவருக்குக் கொரோனா தொற்றுக்கான அறிகுறி உறுதியாக காணப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த பெண் முல்லேரியா ஐ.டி.எச். வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக மாற்றப்பட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikathir



## பெருமாள் கோவில் தேவஸ்தானத்தால் உலர் உணவு உதவிகள் வழங்கிவைப்பு

தொடர் ஊரடங்கு உத்தரவு பிறப்பித்துள்ள காரணத்தால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட – வண்ணை ஸ்ரீ வெங்கடேசபெருமாள் கோயிலின் சுற்றுவட்ட கிராமசேவகர்கள் பிரிவுகளில் உள்ளோருக்கு – உலர் உணவுகள் பெருமாள் தேவஸ்தானத்தால் யாழ் பிரதேச செயலாளர் சுதர்சன் தலைமையில் நேற்று மதியம் வழங்கப்பட்டன. 5வஆ உலர் உணவுப் பொருட்கள்(அரிசி,மா,சீனி,சோயாமீற், தேயிலை) உள்ளடங்கிய 100 உலர் உணவுப் பொருட்கள் பொதி செய்யப்பட்டு சிறி லக்ஷ்மி நாராயணன் கலியாண மண்டபத்தில் வைத்து பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.







# எரியும் வீட்டில் பிடுங்குவதுபோன்று யாழ். வர்த்தகர்கள் செயற்படக்கூடாது

## சிறிகாந்தா பகிரங்கக் கோரிக்கை

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம், ஏப். 05

எரியும் வீட்டில் பிடுங்குவது எல்லாம் இலாபம் என்ற தோரணையில் வர்த்தகர்கள் செயற்படுவதைத் தவிரத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுள்ள தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமா என்.சிறிகாந்தா, இந்த விடயத்தில் வர்த்தகர் சங்கங்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் மக்களுக்கான அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு அரசு வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும் கோரியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஊரடங்குச் சட்ட நிலைமை காரணமாக கடைகளைத் திறக்க அனுமதிக்கப்பட்டிருப்பவர்கள் குறிப்பாக சில்லறை வர்த்தகர்கள் ஒற்றைக் கதவில் அல்லது பின்கதவால் வியாபாரத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அயலில் உள்ள மக்கள் அல்லது அவர்களுடைய வழக்கமான வாடிக்கையாளர்கள் அந்தக் கடைகளுக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

வடக்கு – கிழக்கு மாகாணங்களைப் பொறுத்த மட்டிலே பல கடைகளை நிர்வகிக்கின்ற வர்த்தகர்கள் பொறுப்புணர்வோடு செயற்பட்டாலும் கூட இன்னும் பலர் எறிகின்ற வீட்டில் பிடுங்குவது இலாபம் என்ற தோரணையிலே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலைமை இன்னமும் அகலவில்லை.

இவை தொடர்பில் எங்கள் பகிரங்கமான சுட்டிக்காட்டலுக்குப் பிறகு ஒரு சிலர் தங்களது போக்கை மாற்றிக் கொண்டாலும் கூட இன்னும் பலர் அதே பாதையில் சென்று கொண்டிருக்கின்றார்கள். ஆகவே இந்த வர்த்தகர்கள் தொடர்பில் ஒரு விடயத்தை நாங்கள் அழுத்தம் திருத்தமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறோம்.

இந்த வர்த்தகர்கள் ஒன்றை உணர்ந்து கொள்ள வேண்டும். அதாவது அவர்கள் மக்கள் மத்தியில் தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். மக்கள் மத்தியில் தான் தொடர்ந்தும் வாழப் போகின்றவர்கள். எனவே பிள்ளைகளுக்கோ அல்லது பிள்ளைகளுக்குச் சொத்துச் சேர்ப்பதற்கோ அல்லது சீதனம் சேர்ப்பதற்கும் இதுவல்ல நேரம் என்பதனையும் பொறுப்புணர்வொடு திட்டவட்டமாகச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இந்த விவகாரத்தில் வர்த்தகர் சங்கங்கள் தயவு செய்து முன்வந்து தற்போது தொடர்ந்துகொண்டிருக்கின்ற இந்தக் கேவலமான நிலைமைக்கு முற்றுப் புள்ளி வைக்க கைகொடுக்கவேண்டுமென்றும் நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம். ஆயினும் இந்த வேண்டுகோள்கள் எல்லோரிடத்திலும் பலனளிக்காது என்பது எங்களுக்குத் தெரியும் – என்றார்.

## கம்பளையில் ஊரடங்கு வேளை நேர்ந்த விபத்தில் ஒருவர் காயம்

கம்பளையில் நேற்றுக் காலை, ஊரடங்கு சமயம் லொறியொன்றும் ஓட்டோ ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில், ஓட்டோவின் சாரதி படுகாயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஓட்டோ சாரதி, கம்பளையிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு, வேலைக்குச் செல்லும் போது, பொருள்களை விநியோகிப்பதற்காக வந்த லொறியுடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளார் என்று தெரியவருகிறது.

இச்சம்பவத்தில், ஓட்டோ பலத்த சேதமாகியுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## புத்தளத்தில் வெடிப்பொருள்கள் செயலிழக்கச் செய்யப்பட்டன

புத்தளம் – தில்லையடி, ரத்மல்யாய பிரதேசத்தில் நபர் ஒருவரின் வீட்டிற்கு பின்னால் காணப்பட்ட காடு நேற்று முன்தினம் துப்பரவு செய்யப்பட்ட போது, அங்கு சந்தேகத்திற்கிடமான பொருள்கள் காணப்படுகின்றன எனப் புத்தளம் பொலிஸாருக்கு குறித்து தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, பொலிசார் அந்தப்இடத்திற்குச் சென்று, மோட்டார் குண்டு ஒன்று மற்றும் குண்டுகள் சிலவற்றையும் மீட்டுள்ளனர்.

நேற்று புத்தளம் நீதிமன்றத்தின் உத்தரவின் பிரகாரம், அந்தப் பகுதிக்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் சென்று, வெடிபொருள்களை மீட்டுப் பாதுகாப்பான இடத்தில் வைத்து செயலிழக்கச் செய்தனர் எனப் புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.


வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.




20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

021 222 3536

இல.10 மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் விதி யாழ்ப்பாணம்.

நெல்லியடியில் – இல. 01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி, 076 443 1576

சாவகச்சேரி – இல.01 NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

# கண்ணீர் அஞ்சலி

மறைவு
02
-
04
-
2020



தோற்றம்
22
-
06
-
1947

எமது நண்பன் பா. துஷாந்தன் அவர்களின் அன்புத் தயார்

## அமரர்
## திருமதி. விஷாலட்சுமி பாலகிருஷ்ணன்

இல்லறம் செழிக்க இடைவிடமால்
உழைத்த உத்தமியே
வளர்பிறையாய் உன்
குடும்பம் வளர
தேய்பிறையாய் தேய்துபோன
தியாகச் சுடரே...!

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறையருள் இறைஞ்சுகிறோம்.

ஆஸ்திரோலியா வாழ் நண்பர்கள்


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.04.2020 இல் வெளியிடப்பெற்றது.